**அரசு ஊழியர்**

மே 2019

மலர் : 40 இதழ் : 5

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

# அப்போதும் இப்போதும்

அப்போதெல்லாம் வாக்காளரை
விலைக்கு வாங்கினார்கள்
இப்போது வேட்பாளர்களையே
வாங்கிவிடுகிறார்கள்.
அப்போதெல்லாம் தலைவர்களை
விலைக்கு வாங்கினார்கள்
இப்போது கட்சிகளையே
வாங்கிவிடுகிறார்கள்.
அப்போதெல்லாம் ஆடம்பரப்
பொருட்களுக்கே அதிகவரி போட்டார்கள்
இப்போது அவசியப் பொருட்களுக்கே
அதிகவரி போடுகிறார்கள்.
அப்போதெல்லாம் தலைவர்கள்
புயல்சேத ஆறுதலுக்கு வந்தார்கள்
இப்போது தேர்தலுக்கு மட்டுமே வருகிறார்கள்.
அப்போதெல்லாம்
கோமாளிகள் சர்க்கஸில்தான் இருந்தார்கள்
இப்போது சர்க்காரிலேயே இருக்கிறார்கள்.

**- நா. முத்துநிலவன்**

# “பொன்னுலம் படைப்போம்!

# போராட வா தோழா!

மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு வாய்ப்பில்லாத, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் ஒரு புதிய உலகத்தை படைப்பதற்கான போரில் சளைக்காது அர்ப்பணித்துக் கொள்ள இந்த “மே” தின நாளில் உறுதியேற்போம் என தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அழைக்கிறது.

17வது மக்களவைத் தேர்தல்கள் நடந்து கொண்டிருக்கும் போது, இந்தாண்டு மே தினம் வந்துள்ளது. உழைக்கும் வர்க்கத்தின் உரிமைத் திருநாளான மே நன்னாளில் அனைவருக்கும் புரட்சிகரமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளின் ஆட்சி வீழ்ந்த பின்னணியில், முதலாளித்துவமே தீர்வு என தொண்டை கிழிய கத்தி தீர்த்தார்கள். ஆனால், முதலாளித்துவம்தான் மனிதகுலத்தின் எதிரி என்பதை காலம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது. கடந்த 25 ஆண்டுகளாக உலகம் பொருளாதார நெருக்கடிக்குள் மூழ்கிக் கொண்டே இருக்கிறது.

சிறு குறு, நடுத்தர தொழில்கள் மட்டுமல்ல, பெரிய நிறுவனங்களையும் பன்னாட்டு கார்ப்பரேட் கம்பெனிகள் விழுங்கிவிட்டன. சர்வதேச நிதி மூலதனம் தொழில்களை மட்டுமின்றி தேச அரசுகளையும் ஆட்டி வைக்கிறது.

தொழிலாளர்களின் வேலைக்கும், சம்பளத்திற்கும், ஓய்வூதியத்திற்கும் உரிய உத்தரவாதம் மறுக்கப்படுகிறது. தொழிலாளர் எண்ணிக்கை குறைக்கப்படுகிறது. வேலை நேரமும், பணிச்சுமையும் ஏற்றப்படுகிறது. வேலையின்மை அதிகரிக்கப்படுகிறது. தேசங்களின் இயற்கை வளங்கள், கனிம வளங்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன.

மக்களின் பாதிப்புகளை அரசுகளால் களைய முடியவில்லை. மத, இன மோதல்கள் உருவாகியுள்ளது. இப்படி ஏராளமான பாதிப்புகளால் உலகம் முழுவதும் மக்கள் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்தியாவிலும் இதன் பிரதிபலிப்பை உணர முடிகிறது. உலகமே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறியபோது, அதன் பாதிப்பு இந்தியாவை தொடாமல் காப்பாற்றியது இந்திய

பொதுத்துறை நிறுவனங்களும், சேவை நிறுவனங்களும் ஆகும். இப்படிப்பட்ட பொருளாதாரத்தின் நிலைத்தன்மை மீது பன்னாட்டு நிதி மூலதனத்தின் கண் விழுந்தது.

இதன் தொடர்ச்சியின் ஒரு பகுதியாக இந்தியாவில் நடைபெற்ற ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளும், இந்தியத் தொழிலாளர்கள், விவசாயிகள், நடுத்தர மக்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கடுமையாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். பெரிய கார்ப்பரேட் முதலாளிகள் நலனுக்காக மொத்த இந்தியாவும், இந்திய மக்களும் பலி கொடுக்கப்பட்டுள்ளனர்.

நிரந்தர தொழிலாளர் எண்ணிக்கை பெரிதும் குறைக்கப்பட்டு விட்டது. நியமனங்களில் ஒப்பந்தத் தொழிலாளர் முறை, அவுட் சோர்சிங் முறை, "பிக்ஸட் டெர்ம்" (Fixed Term Appointment) எனும் குறித்த கால பணி நியமன முறை என கொண்டு வரப்பட்டுள்ளது. நிரந்தரம் என்ற வார்த்தை நீக்கப்பட்டுவிட்டது.

ஏதோ ஒரு வேலை கிடைத்து அதில் வாழ்க்கை நடத்துவதற்கு போதிய சம்பளம் ஈடுகட்ட முடியாமலும், எப்போது வேலை போகும் என்ற அச்சத்துடன் வாழ்வோர் ஒருபுறம். எந்த வேலையும் கிடைக்காமல் விரக்தியில் உள்ள இளைஞர்கள் இன்னொருபுறம். இந்த நிலையை பயன்படுத்தி, அவர்களும் மதம், சாதி, வட்டாரம், மொழி ஆகியவற்றின் அடிப்படையில் வெறியூட்டி தன்னைப் போன்றே அவதியுறும் மற்றோர்களை கலகம் செய்யத் தூண்டும் நிலைமை. இதனால் தொழிலாளர் ஒற்றுமைக்கு தீவிரமான அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பிளவுபடுத்தும் தந்திரங்களை எச்சரிக்கையோடு அணுகி தொழிலாளர் ஒற்றுமை கட்டப்பட வேண்டிய காலகட்டத்தில் உள்ளனர்.

கடந்த நாற்பது ஆண்டுகளாக பெருமளவில் தொழிற் சங்கங்களை ஒன்றுசேர்த்து, ஒற்றுமைப் படுத்தி தாராளமயக் கொள்கைகளை அரசு ஊழியர்கள் சங்கம் எதிர்த்துப் போராடி வருகிறோம். இந்த ஆண்டு ஜனவரி 8, 9 ஆகிய இரண்டு நாட்களில் நடைபெற்ற வேலை நிறுத்தத்தில் 20 கோடி தொழிலாளர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். பொது வேலை நிறுத்த மின்றி, துறைவாரியான வேலை நிறுத்தங்கள், ஜாக்டோ-ஜியோ எனும் அரசு ஊழியர்-ஆசிரியர் சங்கங்களின் வேலை நிறுத்தங்கள் ஆகியவற்றில் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் ஒற்றுமையாக ஈடுபட்டிருக்கின்றனர்.



தமிழகத்தில் நடக்கும் ஆட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உரிமைகளையும், கோரிக்கைகளையும் மாநில அரசு அலட்சியப் படுத்துகிறது. அண்மைக் காலத்தில் ஓய்வூதியம், ஊதிய முரண்பாடுகள், சிறப்பு காலமுறை ரத்து, இளைஞர்களின் வேலை வாய்ப்பை தட்டிப் பறிக்கும் அரசாணை 56 ரத்து உள்ளிட்ட கோரிக்கைகளை முன்னிறுத்தி அரசு ஊழியர்கள் - ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தையும், அரசு கையாண்ட விதம் தெரிந்ததே. கடுமையான அடக்குமுறையை கையாண்டது. சம்பள வெட்டு, 17(பி) குற்றச்சாட்டு, பதவி உயர்வு மறுப்பு, வரலாற்றில் இல்லாத அளவு ஓய்வு கால பயன்கள் மறுப்பு, பணி மாறுதல் என பலமுறை தண்டனைகள் வழங்கியுள்ளது.

இந்த நிலையில்தான் நாம் நாடாளுமன்ற தேர்தலை சந்தித்திருக்கிறோம். வரும் மத்திய அரசு, மாநில அரசு மேற்படி நடவடிக்கைகளை முற்றிலும் கைவிட்டு விடும் என்ற எண்ணம் வேண்டாம். ஏராளமான பிரச்சனைகளும், நிலுவை கோரிக்கைகளும், நெஞ்சில் பட்ட வடுக்களும் இன்னும் நீங்காமல், நிறைவேறாமல் உள்ளன.

எனவே, உழைப்பை மட்டுமே நம்பி வாழ்கிற கோடானு கோடி சாமானிய மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்கும் எழுச்சிமிகு போராட்டங்களை இன்னும் வீறுகொண்டு முன்னெடுக்க வேண்டிய வரலாற்று கடமை தொழிலாளி வர்க்கத்தின் தோள்களில் இருக்கிறது.

மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு வாய்ப் பில்லாத எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் ஓர் இனிய உலகத்தை படைப்பதற்கான போரில் சளைக்காது அர்ப்பணிப்புடன் ஈடுபட இந்த மே நாளில் உறுதியேற்போம். இறுதி வெற்றி நமதே!

போராடி போராடி பொன்னுலகம் படைப்போம்! வா தோழா!

❖

# கண்ணீர் தேசமான தண்ணீர் தேசம்



ஒரு கன்னத்தில் அறைந்தால்
மறு கன்னத்தைக் காட்டச் சொன்னவன்

அனைத்து பாவிகளின் பாவங்களையும்
அவனே சுமப்பவன்

உடல் முழுவதும்
அறையப்பட்ட ஆணிகளும்
வழிந்தோடிய குருதியுமென
சிலுவையில் சாய்ந்து
பாரம் சுமப்பவன்

பகைவருக்கும் பாவமன்னிப்பு
திகைக்க வைக்க
தேவாலய குண்டு வெடிப்புகள்
பலிகளின் எண்ணிக்கை
உயர உயர
மனித ரத்தச் சுவறுகளிடையே
மௌனியாய் இயேசுபிரான்

நியூசிலாந்து குண்டுவெடிப்பு
வீசிய 'பழிக்குப் பழி'
இலங்கை தண்ணீர் தேசத்தை
கண்ணீர் தேசமாக்கியது

உயிர்ப்பலிகளும்
மனவலிகளும்
கண்ணீர்க் காட்சிகளும்
இலங்கைக்கே வாழ்க்கைப்பட்டவையா?

புல்வாமா தாக்குதல்
புஸ்வானமாகிப் போயிருக்கலாம்
உளவுத்துறை முன்னெச்சரிக்கையை
உள்ளபடியே உள்வாங்கியிருந்தால்
இலங்கை குண்டுவெடிப்பும்
இல்லாமல் போயிருக்கலாம்
உளவுத்துறை முன்னெச்சரிக்கையை
உள்ளபடியே உள்வாங்கியிருந்தால்

இரண்டு அரசுகளுக்குமே
மனித உயிர்கள் பகடைக்காய்கள்
மீண்டு வர இயலாத
மனித உயிர்களின் மகோன்னதமறியா
மனிதவிரோத அரசுகள்

அன்பையே போதிப்பவை
அனைத்து மதங்களுமெனில்
மத மோதல்களில்
மனித உயிர்கள் மடிவதேன்?

'மதம் ஓர் அபின்'
மார்க்ஸ் உதிர்த்தது
மாறாதது
கூடவே
'மனிதம் அனைத்தையும் கடந்தது'
என்பதும்கூட

- பெரணமல்லூர் சேகரன்

❖

# பெற்ற உரிமைகளை விட்டுக் கொடுக்காமல் கட்டிக் காக்க அமைப்பு தின சூளுரை ஏற்போம்!



வரலாற்றின் இந்த காலகட்டத்தில் வாழ்ந்து
கடந்த செல்கிறவர்கள் எல்லோரையும்
நான் ஒன்று கேட்டுக் கொள்கிறேன்,

இதை செவிமெடுக்கும் கணவான்களே
இதை கேட்டுக் கொண்டிருக்கும் சீமாட்டிகளே
நடந்து முடிந்த போராட்டங்களில் பங்கு
பெற்றவர்களை ஒருபோதும் மறந்துவிடாதீர்கள்

அவர்கள் சிறைசென்று பட்ட சித்திரவதைகளையும்
பூட்ஸ் கால்களில் உதைபட்டு கிழிந்த சதைகளையும்
எப்போதும் நினைவில் வைத்திருங்கள்

அவர்கள் தங்களுக்காக அந்தத் தியாகங்களை
செய்யவில்லை, நம் எல்லோருக்காகவும்
செய்துள்ளனர் என்பதை மறவாதீர்.

கடந்த காலத்தின் வரலாற்றைப் படைத்த
ஊர் பேர் தெரியாத வீரர்களின் சகாப்தத்தை
இந்த தினத்தில் நினைவு கொள்வோம் வாருங்கள்

அவர்கள் எல்லோருக்கும் பெயர்கள் இருந்தன
அவர்கள் எல்லோருக்கும் முகங்கள் இருந்தன
அவர்கள் எல்லோருக்கும் நம்பிக்கைகள் இருந்தன.

நினைவில் நிற்பவர்கள் பட்ட துயரங்களைவிட
பெயர்தெரியாதவர் பட்ட துன்பங்களும் துயரங்களும்
எந்த விதத்திலும் குறைந்தது அல்ல.

அவர்களுக்காக நாம் செய்ய வேண்டியது ஒன்றுதான்
அவர்கள் குருதி சிந்தி பெற்றுத்தந்த உரிமைகளை
உயிர்பிரிய நேரிடினும் உறுதியோடு காப்போம்
அதற்கான உறுதிமொழியை அமைப்பு தினத்தில் ஏற்போம்.

மேசையிலிருந்து...

தோழர் ஜூலியஸ் பூசிக், செக்கோஸ்லோவகிய கம்யூனிஸ்ட் எழுதிய ''தூக்குமேடைக் குறிப்புகள்'' நூலின் மூலத்திலிருந்து வடிக்கப்பட்ட வரிகள்தான் இவை. இதை திரும்பத் திரும்பப் படித்தால் நாமும் ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உணர்வு நிச்சயம் நம்மை உந்தும்.

மனிதனுக்கு இழைக்கப்படும் மிகப்பெரிய அநீதி எது? உரிமைகள் மறுக்கப்படுவதுதான். எதை உரிமை என்று சொல்லலாம். மனிதர் சுதந்திரமாக வாழ எவையெல்லாம் அவசியமோ அவை அனைத்தும் அடிப்படை உரிமைகள்தாம். அது உணவாக இருக்கலாம் உடையாக இருக்கலாம் உணர்வாக இருக்கலாம். ஒப்புக்கொள்ளப்பட்ட உரிமைகள் மறுக்கப்பட்டதன் பேரில் கொதித்தெழுந்த இயக்கம் தான் தொழிலாளர் இயக்கம். வலிகளால் தோன்றிய இந்த உழைப்பாளர்களின் ஒற்றுமை வலிமையானதாக மாற ஒன்றுபட்டவர்கள் இயக்கம் என்ற ஸ்தாபனத்தை வடிவமைத்தனர். இவைகள் ஓரிரு நாட்களில் தோன்றிவிடவில்லை உழைக்கும் மக்களின் ஒன்றுபட்ட இயக்கங்களை வளர்த்தெடுக்க, உரிமை வேட்கை உணர்வுள்ள தலைவர்கள் ஒவ்வொரு இடத்திலும் தோன்றி உரிமைகளை கேட்கும் அமைப்புகளை தங்கள் தன்னலமற்ற சேவைகளினால் தோற்றுவித்தார்கள். தங்கள் நலன், தங்கள் குழந்தைகள் நலன், தங்கள் குடும்ப நலன் போன்றவற்றை பின் நிறுத்தி அமைப்பை வலிமைப்படுத்த அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளினால் இயக்கங்கள் ஸ்தாபனங்களாக மாறின. பெற்ற உரிமைகளை பேணிக் காக்கவும், மற்ற உரிமைகளைத் தட்டிக் கேட்கவும், உழைப்பாளிகளும் தொழிலாளிகளும் ஊழியர்களும் தங்களை பட்டை தீட்டிக்கொள்ளும் பட்டறையாக இந்த ஸ்தாபனங்கள் உள்ளன. இந்த ஸ்தாபனங்கள் இல்லையேல் இப்போது நாம் அனுபவித்து வரும் உரிமைகளை பாதுகாப்பாக வைத்திருக்கக்கூடிய பெட்டகம் இல்லாமல் போய்விட்டிருக்கும். முகம் தெரிந்த, முகம் தெரியாத தோழர்கள் சிந்திய வியர்வைகளிலிருந்தும் வடித்த ரத்தங்களிலிருந்தும் பெற்ற உரிமைகளின் வலிகள் உணரப்படாமல் போயிருக்கும்.

ஒரு ஸ்தாபனம் என்பது எப்படி இருக்க வேண்டும்? அது அதனுடைய ஒவ்வொரு உறுப்பினர்களிடத்திலும் உயிர் மூச்சாக இருக்க வேண்டும். ஒவ்வொரு உரிமை மீட்புக்குப் பின்னும் அடுத்த கட்ட போராட்டத்துக்கான ஆயத்தங்களுடன் காத்திருக்க வேண்டும். அதே நேரத்தில் ஒவ்வொரு ஊழியரின் மனதிலும் அசாதாரணமான புதிய படிமங்களையும் கருத்துக்களையும் விதைக்க வேண்டும். நம்மைச்சுற்றி நிகழும் குழப்பம் நிறைந்த வருத்தமளிக்கக்கூடிய, பரவசமான மாற்றங்களின் உண்மைக் காரணங்கள் என்னவென்று தெரிந்துகொள்ளும் வகையில் அது நம் கண்களைத் திறக்க வேண்டும். இவையெல்லாவற்றையும் விட பெரும் மக்கள்திரள் அனுபவித்துக் கொண்டிருக்கும் தேவையில்லாத துயரத்தை முடிவுக்குக் கொண்டுவரும் எதிர்காலம் ஒன்றின் முகவர்களாக மாற அது நம்மைத் தூண்ட வேண்டும். தான் கொண்டிருக்கும் உண்மையான விடுதலைக்கான, உரிமை மீட்புக்கான சாத்தியத்தை அனைவரும் உணர்வதற்கான உந்துதலை அது தர வேண்டும். நமக்கென்று நாம் அமைத்துக் கொண்டுள்ள ஸ்தபானம் இதையெல்லாம் ஊழியர்கள் மத்தியில் விதைத்துள்ளதா? சிந்தனையைத் தூண்டியுள்ளதா? சாதித்துள்ளதா? என்பதை இந்த அமைப்பின் செயல்பாடுகளிலிருந்தும், இந்த செயல்பாடுகளில் ஊழியர்களின் பங்களிப்பிலிருந்தும் அவரவர் செயல்பாடுகளுக்கேற்ப உணர்ந்து கொள்ளலாம்.

1981 அரசு ஊழியர் நடத்தை விதிகள் திருத்தப்பட்ட வருடம். உறுப்பினர்களை சங்கத்தில் சேர்க்க, ஊர்வலம் நடத்த, உண்ணாவிரதம் இருக்க தடைகள் விதிக்கப்பட்டு அரசு ஊழியர்கள் மீது அடுக்கடுக்கான தாக்குதல்களை தொடுத்தது. இவற்றை எதிர்த்து போராட வேண்டிய சங்கத் தலைமை (என்ஜிஓ) மாறாக அரசிடம் சரணாகதி அடைந்தது. 1982ல் மறியல் போரட்டத்தில் ஈடுபட்ட 528 அரசு ஊழியர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். இவர்கள் 18 மாதகாலம் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்தனர். இவர்களை பாதுகாக்க சங்கத் தலைமை எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. இதனால் கோபமும் அதிருப்தியும் கொண்ட ஊழியர்கள் சங்கத் தேர்தல்களில் மாவட்ட நிர்வாகிகளாக நடவடிக்கை குழுவினரை தேர்ந்தெடுத்தனர். அவர்கள் தலைமையின் சரணாகதிக்கு எதிராகத் தொடர்ந்து போராடிக்கொண்டே மறுபக்கத்தில் ஊழியர்களை கோரிக்கைகளுக்காகப் போராட ஆயத்தப்படுத்தும் பிரச்சாரத்தையும் மேற்கொண்டனர். இதனால் வெறுப்பும் கோபமும் கொண்ட சங்கத் தலைமை எட்டு மாவட்ட கிளைகளைக் கலைத்தது. 800க்கும் மேற்பட்ட முன்னணி ஊழியர்களை அடிப்படை பொறுப்பிலிருந்து நீக்கியது.

அரசு ஊழியர்களின் நலன்கள் இக்கால கட்டத்தில் யாராலும் பாதுகாக்கப்படவில்லை. இந்நிலையில் ஊழியர்களின் உரிமைகளுக்காகப் போராடவும், அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கவும் புதியதொரு அமைப்பை ஏற்படுத்துவது அவசியமென்ற கருத்து கீழிருந்து உருப்பெற்று வந்தது. அந்த லட்சியங்களை வென்றெடுப்பதற்காகவும், வளைந்து கொடுக்காத தலைமைக்காகவும் 1984 மே 6ம் தேதி மதுரையில் பெருவாரியான ஊழியர்கள் பங்கேற்ற கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் உதயமானது. அந்த தினத்தைத்தான் நாம் அமைப்பு தினமாக கொண்டாடுகிறோம். மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு வாய்ப்பில்லாத, எல்லோருக்கும் எல்லாம் கிடைக்கும் ஓர் இனிய உலகத்தைப் படைப்பதற்கான போரில் சளைக்காது ஈடுபடவே இந்த அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது.

சோவியத் யூனியன், கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகளின் ஆட்சி வீழ்ந்தபோது... முதலாளித்துவமே தீர்வு என தொண்டைகிழியக் கத்தியவர்களுக்கு இன்று ஒன்று புரிந்திருக்கும் ஆம் மனிதகுலத்தின் முதல் எதிரி முதலாளித்துவம் தான் என்பதை இன்று காலம் உணர்த்திக் காட்டியுள்ளது. கடந்த கால் நூற்றாண்டுகளாக உலகம், பொருளாதார நெருக்கடி எனும் மகா சமுத்திரத்திற்குள் மூழ்கிக் கொண்டே இருக்கிறது. தொழிலாளர்களின் வேலைக்கும், சம்பளத்துக்குமான உத்தரவாதம் மறுக்கப்பட்டுள்ளது. குறைவான பணக்காரர்கள் கையில் ஏராளமாய்ச் செல்வம் குவியவும், மிகப் பெரும்பாலானவர்கள் அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவு செய்ய முடியாமல் அலைவதுமான சமமின்மை உருவாக்கப்பட்டுவிட்டது. மக்களின் பாதிப்புகளை தேச அரசுகளால் களைய முடியவில்லை. மக்கள் தமது துயரங்களுக்கான காரணங்களை அறிந்து எதிர்த்துப் போராடுவதற்குப் பதிலாக மத இன அடையாளங்களை முன்னிருத்தி சக மனிதர்கள் மீது வெறுப்பு இனவாத மேலாதிக்கம் படுகொலைகள் என வலதுசாரி திருப்பம் உலக அரசியலில் உருவாகியுள்ளது. இதன் பிரதிபலிப்பு இந்தியாவிலும் எதிரொலித்தது.

உலகமே பொருளாளதார நெருக்கடியில் சிக்கித் திணறிய போது அதன் பாதிப்பு இந்தியாவைத் தொடாமல் காப்பாற்றியது இந்திய பொதுத்துறை வங்கிகளும் இந்திய பொதுத்துறை உற்பத்தி சேவை நிறுவனங்களுமே ஆகும். இதன் மீது பன்னாட்டு நிதி மூலதனத்தின் கண் விழுந்தது. அது இந்தியாவை வளர்ச்சிப்பாதையில் எடுத்துச் செல்வதற்கான தகுதி வாய்ந்த ஒரே நபர் மோடி என போலிப் பிரச்சாரம் செய்து மோடியை பிரதமர் நாற்காலியில் உட்கார வைத்தது. அம்பானி, அதானி உள்ளிட்ட பெரும் கார்ப்பரேட் முதலாளிகளும் அதற்கு ஒத்து ஊதினர். கடந்த ஐந்தாண்டு கால மோடி ஆட்சியில் கார்ப்பரேட் முதலாளிகளின் நலனுக்காக இந்தியாவும் இந்திய மக்களும் பலி கொடுக்கப்பட்டுள்ளனர். தமது கறுப்புப் பணத்தை வெள்ளையாக்கிக் கொள்வதற்காக 1000, 500 ரூபாய் நோட்டுக்களை செல்லாமல்ஆக்கியதும், நெறியற்ற வகையில் போடப்பட்ட ஜிஎஸ்டி வரியும் இதுவரை இந்தியாவில் 6 லட்சம் தொழிற்சாலைகளை மூட வைத்துள்ளது. ஆறு கோடி தொழிலாளர்களின் வேலை வாய்ப்புகளைப் பறித்துள்ளது. நிரந்தரத் தொழிலாளர் எண்ணிக்கை பெரிதும் குறைக்கப்பட்டு விட்டது. ஒப்பந்தத் தொழிலாளர் முறையில்கூட தொழிலாளர்களின் சில உரிமைகளை புறக்கணிக்க முடியாத சூழ்நிலை நிர்வாகத்திற்கு உள்ளதால் ''பிக்சட் டெர்ம்'' எனப்படும் குறித்த கால பணி நியமன முறை கொண்டு வரப்பட்டது. அதில்கூட எம்ப்ளாய்மெண்ட் என்ற வார்த்தை உள்ளதால் ''நீம்'' என்ற பயிற்சியாளர் முறை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன்மூலம் தொழிலாளி என்ற தகுதி உழைப்பவனுக்கு கிடைக்காத நிலையில் அவர் பணி நிரந்தரம் கோரமுடியாத நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த நாற்பது ஆண்டுகளில் தொழிற்சங்கங்கள் பெருமளவில் ஒன்றுகூடி தாராளமயக் கொள்கைகளை எதிர்த்துப் போராடி வருகின்றன. தொழிலாளி வர்க்கத்தின் ஒன்றுபட்ட குரலுக்கு அரசு செவி சாய்க்கத் தயாராக இல்லை. நிர்வாகம் மற்றும் ஜனநாயகத்தின் தூண்களாக இருக்கக்கூடிய நீதிமன்றம், நாடாளுமன்றம் தேர்தல்ஆணையம், ரிசர்வ் வங்கி, மத்திய புலனாய்வுத் துறை உள்ளிட்ட அனைத்தையும் விலைக்கு வாங்கி மோடி என்ற சர்வாதிகாரத்தை நிலைநாட்டும் முயற்சிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. மதச்சார்பு தன்மையும், கார்ப்பரேட்டின் காலில் மண்டியிட்ட பொருளாதாரக் கொள்கையும் கொண்ட சர்வாதிகாரத்தின் கைகளில் இருந்து நாட்டைப் பாதுகாப்பது அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் உள்ளிட்ட உழைக்கும் வர்க்கத்தின் முக்கிய கடமையாகும். இதனால் மட்டும்

பொதுமக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் சாதகமான நிலை உருவாகிவிடும் என்று நாம் எண்ணிவிட முடியாது. அவற்றுக்கான போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். உரிமை வேட்கையின் கடைசி தணல் இருக்கும் வரை போராட்டங்கள் தொடர்ந்தே ஆக வேண்டும்.

தமிழகத்தில் நடக்கும் ஆட்சியின் குடுமி பாஜகவின் கையில் உள்ளது. அதனால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் தொழிலாளர்கள் விவசாயிகளின் கோரிக்கைகளை, போராட்டங்களை, உரிமைகளை மாநில அரசு சர்வசாதாரணமாக அலட்சியப்படுத்துகிறது. சென்னையைச் சுற்றி அமைந்துள்ள பன்னாட்டு நிறுவனங்கள் இந்தியத் தொழிலாளர் சட்டங்களை தூக்கியெறிந்துவிட்டு, அவர்தம் கொள்கைப்படிதான் தொழிலுறவு என்று சொல்வதை வெட்கமில்லாமல் ஆதரிக்கிறது மாநில அரசு. மாநில பொதுத்துறை. கூட்டுறவுத்துறை, உள்ளாட்சி அமைப்புகளிலும்கூட தொழிலாளர் சட்டங்களை அரசாங்கமே மீறுகிறது.

இந்திய தொழில் கூட்டமைப்பு நிர்ணயித்துள்ள ரூ.18,000/-க்கு குறையாத அடிப்படை ஊதியத்தை உறுதிப்படுத்த ஆட்சியாளர்களோ, நீதிமன்றங்களோ ஒரு துரும்புக்குக்கூட முன் வரவில்லை.

அரசியலமைப்புச் சட்டம் வகுத்துள்ள அனைவருக்கும் இலவசக் கல்வி, சுகாதாரம் போன்றவற்றை அரசியலமைப்புச் சட்டப்படி ரகசிய காப்புப் பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ள இந்திய தேசத்தின் மந்திரிகளோ, நீதிமான்களோ கண்டுகொள்ளவில்லை.

1.1.2016 முதல் வழங்கப்பட வேண்டிய ஊதிய மாற்ற நிலுவைத் தொகைகளை முற்றிலும் பெற்றுக்கொண்ட நீதிபதிகள் முதல் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகள் வரையிலானவர்கள் அதை அனைத்துத் தரப்பு அரசு ஊழியர்களுக்கும் ஏன் வழங்கவில்லை என்றோ தங்களுக்கு வழங்கியதைப் போல அனைவருக்கும் வழங்க வேண்டும் என்றோ சமநீதி பேசவில்லை.

உச்சநீதிமன்ற உத்தரவுப்படி தொகுப்பூதியம் மதிப்பூதியம் ஊக்கத்தொகை போன்ற அற்பக்கூலி முறையை ஒழித்துக்கட்ட எந்த அரசாங்கமும் முன்வரவில்லை


தொடர்ச்சியும் நிரந்தரத் தன்மையும் ரெகண்ட வேலைகளில் 480 நாள் பணிபுரிந்துவிட்டால் அவர்களை நிரந்தரப்படுத்த வேண்டும் என்ற சட்டமும் தர்மமும் காக்கப்படவில்லை.

தொழிலாளர் நலச் சட்டங்கள் முதலாளிகளுக்குச் சாதகமாக மாற்றப்படுவதை எதிர்த்து அரசாங்கமோ, நீதிமன்றமோ, ஊடகமோ கேள்வி கேட்கவில்லை.

கடந்த 2017 ஜூலையில் பிரெஞ்சு பொருளியல் அறிஞர்கள் லூக்காஸ் சான்செவும், தாமஸ் பிக்கெட்டியும் வெளியிட்டுள்ள அறிக்கையில் 2017ல் இந்தியாவில் உருவாக்கப்பட்ட மொத்த வருமானத்தில் 73 சதவீத வருமானத்தை, மக்கள் தொகையில் ஒரே ஒரு சதவீதமாக உள்ள பெருஞ்செல்வர்கள் உடைமையாகக் கொண்டிருந்தனர். 67 சதவீத இந்திய ஏழைகளின் வருமானம் 2017ல் ஒரு சதவீதம் மட்டுமே அதிகரித்தது. இதன் உண்மையான அர்த்தம் என்ன கார்ப்பரேட்டுகள் தாங்கள் லாபம் ஈட்டுவதற்காக அரசாங்கத்தை நிர்ப்பந்தித்தோஅல்லது வேறு வகைகளிலோ உழைப்பாளி மக்களுக்கு கிடைக்க வேண்டிய நியாயமான ஊதியத்தை குறைத்தும் தடுத்தும் தங்கள் செல்வத்தை பெருக்கிக் கொள்கிறார்கள் என்பதே ஆகும். இதன் விளைவாகத்தான் அரசுத் துறைகளில் காலியாக விடப்பட்ட இடங்கள் நிரப்பப்படாமலேயே நீக்கப்பட்டு வருகின்றன.

அரசியலைப் பாருங்கள் அங்கே போராடும் தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், விவசாயிகள், பொதுமக்கள் வரை யாரைப்பற்றியும் அவர்களுக்கு கவலையே இல்லை. கேட்பார் யாரும் இல்லை. நீதிமன்றங்களைப் பாருங்கள் அங்கே உயரிய பொறுப்பில் உள்ளவர் மீதே பாலியல் புகார் அந்தப் புகாரை தலைமை நீதிபதி அணுகிய விதம் பற்றி ஆயிரம் சர்ச்சைகள், எல்லைகளில் போர் பதற்றம், இலங்கையில் குண்டு வெடிப்பு, புல்வாமாவில் உயிரிழப்பு எல்லாவற்றையும் இந்தத் தேர்தல் மூடி மறைக்கப் பார்க்கிறது.

தேர்தல் களத்தைப் பாருங்கள் அங்கே பணத்தின் ஆதிக்கம் அதிகரிக்க அதிகரிக்க சாமானியர்களின் பங்களிப்பு குறைகிறது. ஒரு விவசாயி, ஒரு ஆலைத் தொழிலாளி, அடுத்த மாதச்




செலவுக்கு என்ன செய்வது என்று திகைக்கும் குடும்பத் தலைவி போன்றவர்கள் எங்கேனும் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருப்பதாக கேள்விப்படுகிறோமா? மதிக்கத்தக்க வருமானத்தைக் கொண்ட மருத்துவர்கள், பொறியாளர்கள், தணிக்கையாளர்கள், பேராசிரியர்கள் போன்றவர்கள் இன்றைக்கு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவது அபூர்வமாகிவிட்டது. இதற்குக் காரணம் சாமானியர்களின் பிரச்னைகளுக்கான கவனமும் குறைந்து வருகிறது. தேர்தலில் ஓட்டுக்கு பணம் கொடுப்பதும் ஒரு கலாச்சாரமாகி வரும் நிலையில் சமானியர்களை முற்றிலும் அந்நியப்படுத்தி ஒரு மூலையில் கொட்டிவிடும் ஜனநாயகம் தான் தலைதூக்கி வருகிறது. இது ஆரோக்கியமான சமுதாயத்தை விளைவிக்காது. பணத்தால் ஓட்டை வாங்கி நாட்டை ஆளும் போக்கு வந்துவிட்டால் கார்ப்பரேட்டுகளும் களவாணிகளும்தான் இந்த நாட்டை ஆள நேரிடும். ஏழைகள், விவசாயிகள், தொழிலாளிகள் என போராடும் ஒவ்வொரு பிரிவினரும் சர்வாதிகார சமுத்திரத்தில் காணாமல் போக நேரிடும்.

இவை எல்லாவற்றையும் எதிர்க்கவும், மக்களை ஒருமுகப்படுத்தி நேர்மையான, நியாயமான உரிமைகளுக்காக அவர்களை போராட வைக்கவும், பணத்தால் எதையும் சாதிக்கலாம் என்ற சர்வாதிகார கார்ப்பரேட்டுகளின் திமிரை அவர்களுக்கு கைகட்டி சேவகம் செய்கிற அரசியல் வாதிகளை அப்புறப்படுத்தி ஜனநாயகத்தை நல்ல நிழல்தரும் வாசம் தரும் கேட்டதெல்லாம் தரும் கற்பகத் தருவாக மாற்றும் முயற்சியில் இன்றிலிருந்து அடியெடுத்து வைப்போம். நம்முடைய முன்னோடித் தோழர்கள் பெற்றுத்தந்த உரிமைகளை எப்பாடு பட்டேனும் காப்போம் என்ற உறுதியை இந்த அமைப்பு தினத்தில் சூளுரைப்போம்.

பெற்ற உரிமை ஒவ்வொன்றின் பின்னும்
உழைத்திட்ட கரங்களுண்டு
வடித்திட்ட வியர்வையுண்டு
சிந்திய ரத்தமுண்டு – அவற்றை
விட்டுவிடாமல் கட்டிக் காக்க வேண்டிய
கடமையும் உறுதியும் நமக்குண்டு
அதற்கான சூளுரை ஏற்போம் இன்று.

❖

# பெற்ற உரிமைகளை பேணிக்காக்க
# அமைப்பு தின சூளுரை ஏற்போம்!

தமிழ்நாட்டிலுள்ள அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் பறிக்கப்பட்ட உரிமைகள் அனைத்தையும் வென்றெடுப்பதற்கான வலுவான ஒன்றுபட்ட போராட்டத்தை உருவாக்கியாக வேண்டியுள்ளது. இக்கடமையை நிறைவேற்றுவதற்கான பிரதானப் பாத்திரத்தை வகிக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்கு முதன்மையாக உள்ளது. இப்பொறுப்பினைச் செவ்வனே நிறைவேற்றிட நமது சங்கத்தின் முன்னணித் தோழர்கள், இச்சங்கம் உருவாகி கடந்து வந்துள்ள பாதைகள் குறித்தும், இன்றுள்ள நிலைமைகள் குறித்தும், எதிர்காலக் கடமைகள் குறித்தும் ஒரு தெளிவான கருத்தோட்டத்தைக் கொண்டவர்களாக இருக்க வேண்டியது அவசியமாகிறது.

புதிய லட்சியங்களுக்கான போராட்டங்களை வகுக்கும்போது கடந்தகால வரலாறுகளையும், கடந்து வந்த பாதைகளையும் நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். அவற்றை நினைவு பெறும் தினமே அமைப்பு தினமாகும்.

சங்க வரலாறு முழுவதையுமோ, சங்கம் உருவானது முதல், நாளது வரை நடத்தப்பட்டுள்ள போராட்டங்கள் அனைத்தையுமோ இந்த ஒரே மூச்சில் விளக்கிட முடியாது. எனினும் வரலாற்று நிகழ்வுகளின் முக்கியமான திருப்பங்கள் மற்றும் அவற்றின் பின்புலனில் ஏற்பட்ட கருத்து முரண்கள் அதனால் அரசு ஊழியர் - ஆசிரியர் இயக்கங்களில் ஏற்பட்ட குணாம்சரீதியான மாற்றங்கள் அகியவற்றைத் தொட்டுச் செல்வதாகவே இந்த அமைப்பு தினக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஒரு குறிப்பிட்ட இலட்சியம் அல்லது நோக்கத்தைக் கொண்டவர்கள் அதனை அடைவதற்காக தங்களுக்குள் ஒருங்கிணைந்து ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு கருவியே சங்கம் என்று அழைக்கப்படுகிறது.

## அரசு ஊழியர் சங்கம்

பணியிலுள்ள அரசு ஊழியர்கள் மட்டுமே அங்கம் வகிக்கக்கூடிய ஒரு தொழிற்சங்க ஸ்தாபனமே அரசு ஊழியர் சங்கமாகும்.

தொழிற்சங்கத்தின் பிரதான கடமைகள்

1. தொழிலாளர்கள்/ஊழியர்களின் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பது.
2. பணிப்பாதுகாப்பை உத்தரவாதம் செய்வது, பணிநிலைமைகளை மேம்படுத்துவது.
3. சமூகத்தில் முற்போக்கான மாற்றங்களை உருவாக்கிட தனது திரட்டப்பட்ட சக்தியைப் பயன்படுத்துவது.

இந்த மூன்று பிரதான கடமைகளை நிறைவேற்றுவதற்கான போராட்டங்களைச் சமரசமின்றி நடத்திடும் சங்கமே முறையான தொழிற்சங்கமாகும்.

## அரசு ஊழியர் உருவான வரலாறு - சுருக்கம்

1757 பிளாசிப் போரில் வெற்றி பெற்ற ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி, இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டது. பிரித்தாளும் சூழ்ச்சி, கையூட்டு என பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி நூறு ஆண்டுகளுக்குள் இந்தியாவின் பெரும் பகுதியை தனது ஆளுகைக்குள் கொண்டு வந்தது.

1857ல் நடைபெற்ற சிப்பாய் கலகம் என்ற முதல் இந்திய சுதந்திரப் போர் கடுமையாக அடக்கி ஒடுக்கப்பட்டது. அதன்பின்னர் இந்தியாவின் ஆட்சியதிகாரத்தை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியிடமிருந்து பிரிட்டிஷ் அரசாங்கமே விக்டோரியா மகாசாசனம் மூலம் ஏற்றுக்கொண்டது.

அதன்படி, ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியின் குமாஸ்தாக்களும், சேவகர்களும் அரசு ஊழியர்களாக உருமாற்றம் பெற்றார்கள்.

## விடுதலைப் போராட்டப் பின்னணியில்...

பிரிட்டிஷ் அரசின் ஆதிக்க விரிவாக்கத்தின் தேவையையொட்டி, பரந்துபட்ட இந்திய நாட்டை அடக்கியாள அரசு இயந்திரம் விரிவாக்கப்பட்டது. இதன் வளர்ச்சிப் போக்கில், பிரிட்டிஷ் பாரம்பரிய அடித்தளத்தில் உருவானதுதான் இந்திய பொதுப்பணி அமைப்பு முறை (Indian Civil or Public Service System) ஆகும்.

காரன்வாலிஸ் பிரபுவின் முயற்சியில் வருவாய் வசூல் பொறுப்புகளை நிறைவேற்றிட கலெக்டர்களும், சிவில் மற்றும் கிரிமினல் தாவாக்களுக்குத் தீர்வு காண நீதிபதிகளும் என்ற புதிய முறை இந்தக் காலகட்டத்தில் அமலானது.

இந்த பொதுப்பணி முறையின் நோக்கம் அரசுக்கு ஆதரவானவர்களைப் பாதுகாப்பது மற்றும் கிளர்ச்சி செய்பவர்களைத் தண்டிப்பது. தன்வசமே இருக்கும் வகையில், நிர்வாக அதிகாரம் படைத்த உயர் பதவிகள் அனைத்தும் ஆங்கிலேயர்களுக்கே வழங்கப்பட்டு வந்தது.

நிர்வாகப் பணியில் குமாஸ்தா கூட்டத்தை உருவாக்கும் வகையில் மெக்காலே பிரபுவின் கல்விக்கொள்கை உருவாகி அமலுக்கு வந்தது.

நோக்கம் : நடையில், உடையில், தோற்றத்தில் இந்தியர்களாக இருப்பினும் மனோபாவத்தில் ஆங்கிலேயர்களாக உருவாக்குவது.

ஆங்கிலக் கல்வியும், இந்திய தனவந்தர்கள் பிரிட்டனில் ஆங்கிலக் கல்வி பெற்றுத் திரும்பியதும், இந்தியர்களுக்கும் அரசின் உயர் பதவிகள் என்ற கோஷத்தை வலுவாக முன்வைத்தது. அதற்காக அமைப்புகளும் சங்கங்களும் தோன்றின.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் கொடும் சுரண்டலும், கடுமையான அடக்குமுறைகளும், பெரும் பஞ்சங்களும் மக்களைப் பெருமளவில் பாதித்தன. இதனால், ஏற்பட்ட கொந்தளிப்புகளில் விடுதலை உணர்வுகள் மேலோங்கி நின்றன.

இந்தப் போராட்டங்களை வலுவிழக்கச் செய்ய இரட்டை செயலக முறை உள்ளிட்ட பல்வேறு சமரச ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

1861-ல் கவுன்சிலர்ஸ் ஆக்ட்

1865-ல் முனிசிபல் போர்ட்

1882-ல் டிஸ்ட்ரிக்ட்போர்ட்

இதன்பின்னரும் மக்களிடம் வளர்ந்து வந்த கோபத்தைச் சமாளிக்க ஒரு Safety Value தேவை என பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் முடிவு செய்தனர். 1882 வரை பிரிட்டிஷ், இந்திய அரசுப் பதவியில் இருந்த ஆலன் ஆக்டேவியன் ஹ்யூம், வெட்டர்பர்ன் என்ற இரண்டு ஆங்கிலேயர்களும், தாதாபாய் நௌரோஜி, சுரேந்திரநாத் பானர்ஜி என்ற இரண்டு இந்தியர்களும் சேர்ந்து 1885-ல் 'இந்திய தேசிய காங்கிரஸ்' என்ற அமைப்பை உருவாக்கினர்.

எனினும் விடுதலைப் போராட்டங்கள் வீறுகொண்டு எழுந்தவண்ணம் இருந்தன.

இப்பின்னணியில் அரசு ஊழியர், இந்திய விடுதலைப் போராட்ட இயக்கங்களில் ஈடுபடாமல் தடுக்கும் நோக்கத்துடன் அவர்கள் அரசியல் இயக்கங்களில் ஈடுபடக் கூடாது எனத் தடை விதித்து 1890-ல் கவர்னர் ஜெனரல் உத்திரவிட்டார். 1904ஆம் ஆண்டு அரசு ஊழியர்களுக்கான நன்னடத்தை விதிகள் உருவாக்கப்பட்டு, அவர்களது ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்டு அவர்கள் அரசு இயந்திரத்தின் உதிரிப் பாகங்கள் ஆனார்கள்.

அரசு ஊழியர்களின் குடும்பத்தில் எவரேனும் அரசியல் இயக்கங்களில் ஈடுபட்டால் அதுகுறித்து அரசுக்குத் தகவல் தரவேண்டியது அவர்களின் கடமைடு என விதிக்கப்பட்டது. இந்தியாவின் அரசியல் இயக்கங்கள் சார்ந்த அமைப்புகளுக்கு நிதியளிப்பது தடை செய்யப்பட்டது.

## முதல் உலகப் பெரும் போர்

முதலாளித்துவ நாடுகள் தங்களது சந்தைகளை விரிவாக்கும் நோக்கத்துடன் 1914-ல் யுத்தத்தில் ஈடுபட்டனர்.

1914 முதல் 1918 வரை நடைபெற்ற இந்தப் போரில் இந்த முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்கத்தில் இருந்த காலனி நாடுகளும் ஈடுபடுத்தப்பட்டன.

இப்பெரும் போர் பல்வேறு விளைவுகளை உருவாக்கின. பதுக்கல், பற்றாக்குறை, விலை உயர்வு போன்றவற்றால் முதலாளிகள் கொள்ளை லாபம் பெற்றனர். மறுபுறம் விலை உயர்வால் வாங்கும் சக்தி குறைந்து உழைப்பாளி மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி அடைந்தது.

இதனால் பரவலாக வெகுஜனப் போராட்டங்களும் கிளர்ச்சிகளும் வெடித்தன.

முதல் உலகப் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டத்திலேயே ரஷ்ய நாட்டில் மாபெரும் புரட்சி நடந்து தோழர் லெனின் தலைமையில் தொழிலாளி வர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைத்திட சோசலிச அரசு உருவானது.

இது உலகளாவிய அளவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. உலகெங்கும் விடுதலை இயக்கங்களுக்கும், உழைப்பாளி மக்களுக்கும் பெரும் உத்வேகத்தை அளித்தது.

## போரின் முடிவில்...

முதல் உலகப் பெரும் போரின் முடிவில் சர்வதேச ஸ்தாபனம் (League of Nation) உருவானது.

அதன் துணை அமைப்புகளில் ஒன்றாக சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation) உருவானது. இதன் அமைப்புக் கூட்டத்தில் சென்னையிலிருந்து பி.பி.வாடியா என்ற தொழிற்சங்கத் தலைவரும் கலந்து கொண்டார்.

அதன்படி, ‘சட்டப்பூர்வமான தேவைகளுக்கான தொழிலாளர்கள் சங்கம் அமைத்துக் கொள்ளலாம்’ என்ற சங்கம் அமைக்கும் உரிமை சர்வதேச உரிமையானது.

இந்திய அரசும் தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைத்துக் கொண்டு செயல்படத் தடையில்லை என்று அறிவித்தது. இந்த அறிவிப்பும் ‘இனியும் தடைகளை விதிக்க முடியாது. எனவே, முறைப்படுத்திக் கட்டுப்படுத்துவது’ என்ற முடிவின் அடிப்படையிலேயே வந்தது.

இதற்குப் பின்னர் இந்தியாவில் பல்வேறு பகுதிகளில் பல்வேறு சங்கங்கள் உருவாயின.

## என்.ஜி.ஓ. சங்கம் உதயம்

பிரிட்டிஷ் இந்திய அரசு, அரசுப் பணியில் இருந்தவர்களிடையே ஆங்கிலேயர் - இந்தியர் என்ற பாகுபாட்டைக் கடைபிடித்தது. ஊதியம், பதவி உயர்வு, பென்ஷன் போன்றவை மேல்மட்ட அதிகாரிகளுக்கு மேலும் மேலும் அதிகரித்தது.

அடிமட்டத்திலிருந்த ஊழியர்களின் வாழ்க்கை நிலை மேம்பட எவ்வித நடவடிக்கையும் இல்லை.

என்.ஜி.ஓ.வின் ஊதியம் ரூ.17.50, ரூ. 20, ரூ. 30 என்ற நிலையிலேயே நீண்ட காலமாக இருந்துவந்தது.

இந்தத் துயரமான நிலையிலிருந்து விடுபட சங்கம் தேவை என்ற உணர்வு மேலோங்கிவந்த நிலையில் அரசின் சங்கம் அமைக்கத் தடையின்மை அறிவிப்பு ஊக்கமளித்தது.

31.1.1920 Madras Non Gazetted Officials Association உருவானது.

Immortal Trio சாகாவரம் பெற்ற மூவராக

ஏ.அமீதுஹாசன், பி.ஏ., எல்.எல்.பி., எம்.எஸ்.சுந்தரேசன், எம்.டி.சிரோமணி ஆகிய தலைவர்கள் திகழ்ந்தனர்.

மூன்றே ஆண்டுகளில் சங்கம் சென்னை மாகாணம் முழுவதும் பரவியது.

பிரிட்டிஷ் அரசுக்கு விசுவாசம் தெரிவிக்கும் தீர்மானங்கள் கோரிக்கை மனுக்கள்.

ஏகாதிபத்திய எதிர்ப்பு விடுதலைப் போராட்டத்தில் எவ்விதப் பங்கும் இல்லை.

சங்கத்திற்கு 1924-ல் அரசின் அங்கீகாரம் கிடைத்தது.

## முதல் சம்பள உயர்வும், விதிமுறைகள் கொடுக்கப்படுதலும்

சம்பள விகிதங்கள் சீரமைக்கப்படவும் மற்றும் பல பணிச்சூழ்நிலைகள் மாற்றியமைக்கப்படவும் சங்கம் எடுத்த தொடர் நடவடிக்கைகள், முழுமையாக இல்லாவிட்டாலும், ஊழியர் ஊதியத்தை உயர்த்துவதில் ஓரளவிற்கு வெற்றி ஈட்டியது.

ஒரு எழுத்தருக்கு சென்னை நகரில் மாதம் ரூ.40 புறநகர் பகுதியில் ரூ.35 எனச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டது. மற்ற பிரிவினருக்கோ 1928ல் இதேபோன்ற சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டன.

இதைப்போலவே சங்கத்தின் நடவடிக்கைகள், விடுப்பு, பயணப்படி மற்றும் ஓய்வூதியம் முதலியவை பற்றிய விதிகள் வரையறுக்கப்பட மிகவும் உதவின. ஆனால், அரசு 1931ல் செலவுக் குறைப்புக் கமிட்டி ஒன்றை நிறுவியது.

இக்கமிட்டி தற்காலிகப் பணிகளில் 20 முதல் 40% சம்பளக் குறைப்பும், சபார்டினேட் சர்வீஸில் உள்ளவர்களுக்கு 3.5% முதல் 18.45% வரை சம்பளக் குறைப்பும் ஏற்படுத்தியது. இவ்வாறாக போராடி வலது கையால் பெறப்பட்டவை இடது கையால் எடுத்துக் கொள்ளப்பட்டன.

1936ல் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ராஜாஜி சென்னை மாகாண பிரதமர் ஆனார்.

1938ல் பொருளாதார நெருக்கடியை முன்னிறுத்தி ராஜாஜி மந்திரிசபை பின்வருமாறு ஊதிய வெட்டை அறிவித்தது.

ரூ.100 முதல் ரூ.200 வரை பெறுபவர்களுக்கு 5%

ரூ.200 முதல் ரூ.1000 வரை பெறுபவர்களுக்கு 7.5%

ரூ.1000க்குமேல் பெறுபவர்களுக்கு 30%

சங்கத்தின் முயற்சியால் அடித்தளத்திலுள்ளவர்களுக்கு 5% ஊதிய வெட்டு விலக்கிக் கொள்ளப்பட்டது.

| இராஜாஜி கேள்வி | சுந்தரேசன் பதில் |
|---|---|
| 40,000 ஊழியர்களில் 5000 உறுப்பினர்களை மட்டும் கொண்ட சங்கத்திற்கு பிரதிநிதித்துவ குணாம்சம் (Representative Character) உண்டா? | 30 கோடி மக்களில் ஒன்றரை லட்சம் உறுப்பினர்களை மட்டும் கொண்ட காங்கிரஸ் கட்சிக்கு உள்ள குணாம்சம் சரியென்றால் சங்கத்திற்கும் உண்டு |

## இரண்டாம் உலகப் பெரும் போர்

உலக முதலாளித்துவ நெருக்கடி முற்றியது. காலனி நாடுகளை மறுபங்கீடு செய்து கொள்வதற்காக 1939 முதல் 1945 வரை இரண்டாம் உலகப் பெரும் போர்

அச்சு நாடுகள் எதிர் நேச நாடுகள்

சோவியத் மக்கள் மற்றும் செஞ்சேனையின் பங்கு

1.5.1945ல் பெர்லின் வீழ்ந்தது. ரீச் ஸ்டாக் அரண்மனையில் செங்கொடி ஏற்றப்பட்டது.

6.8.1945ல் ஹிரோஷிமாவிலும், 9.8.1945ல் நாகசாகியிலும் அமெரிக்கா அணுகுண்டு விச்சு



கிழக்கு ஐரோப்பாவில் சோஷலிச நாடுகள் (யுகோஸ்லோவாகியா, செக்கோஸ்லோவாகியா, ஹங்கேரி, கிழக்கு ஜெர்மனி, ருமேனியா, போலந்து போன்ற நாடுகள்)

போரின் முடிவில் கடும் பொருளாதார நெருக்கடி, விலைவாசி உயர்வு, பொருட்களின் பற்றாக்குறை ஆகியவை காரணமாக வாழ்க்கைத்தரம் வீழ்ச்சி

விடுதலை இயக்கத்தின் வீறுகொண்ட எழுச்சி - இதில் என்.ஜி.ஓ.க்களுக்குப் பங்கில்லை.

18.2.1946 கப்பற்படை எழுச்சி

மத்திய அரசு ஊழியர்களின் ஊதியம் குறித்து பரிந்துரைத்திட 10.5.1946ல் நீதிபதி சீனிவாச வரதாச்சாரியார் தலைமையில் மத்திய முதல் ஊதியக் குழு அமைப்பு

இதன் வரம்பிற்குள் மாநில அரசு ஊழியர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

பிரதமரைச் சந்தித்து வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

29.7.1946ல் மாநில முதல்வரைச் சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

8.8.1946ல் சென்னையில் 10,000 பேர் பங்கேற்ற பேரணி

25.8.1946ல் கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் மாநில மாநாடு - 25 மாவட்டங்களிலிருந்து 15,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு

ஒரு மாத அவகாசத்தில் ஸ்டிரைக் நோட்டீஸ் கொடுக்க தீர்மானம்

வெகுஜன எழுச்சிகளும், அரசியல் கொந்தளிப்பும் அரசு ஊழியர்களையும் பாதிக்காமல் இல்லை.

டெல்லி செங்கோட்டையில் இந்திய தேசிய ராணுவ வீரர்களின் விசாரணை பற்றிய செய்திகளும், பம்பாய் நகரில் இந்தியக் கடற்படை வீரர்களின் எழுச்சியும் அது தேசமுழுவதும் ஏற்படுத்தியதைப் போன்றே, சென்னைத் தொழிலாளர்களிடையேயும் ஏற்படுத்திய விளைவுகளும் அரசு ஊழியர்களையும் உசுப்பிவிட்டன.

மூன்று கண்டங்களுக்குச் சென்று திரும்பிய ராணுவ வீரர்கள் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டு, மற்ற நாடுகளில் நடைபெற்ற விடுதலை இயக்கங்களைப் பற்றிய செய்திகளை இந்தியாவின் பட்டி தொட்டிகளிலெல்லாம் பரப்பினர்.

வடஆற்காடு மாவட்டத்தில் அதிக எண்ணிக்கையிலான இராணுவ ஓய்வூதியம் பெறுவோர் இருந்தனர். இவர்களுடைய கதைகள் அங்கு தேசிய விடுதலை இயக்கத்துக்கு மட்டுமல்லாது அரசு ஊழியரிடையேயும் எழுச்சியை ஏற்படுத்தின.

## முதல் வேலை நிறுத்த எச்சரிக்கையும் சமரசமும்

சென்னை ராஜதானியின் 25 மாவட்டங்களிலும் இருந்து வந்த 1500க்கும் மேற்பட்ட ஊழியர் பங்கேற்ற 1946ஆம் வருடம் ஆகஸ்ட் 25ஆம் தேதியன்று கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாநில மாநாட்டில் இவ்வெழுச்சி நிறைவுற்றது.

மாநாட்டில் அரசு சம்பள விகிதங்களை மாற்றியமைக்க ஒத்துகொள்ளவில்லையெனில் ஒரு மாத நோட்டீஸ் கொடுத்து பின் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனை ஒடுக்க அரசு சங்கத்திற்கு வழங்கியிருந்த அங்கீகாரத்தை ரத்து செய்தது. அரசின் தாக்குதலை எதிர்ப்பதற்காக ஊழியர்களைத் திரட்டாமல், சங்கத் தலைமையே அரசிடம் சரணடைந்து சரமசம் செய்து கொண்டது.

## மந்திரி சபையின் துணைக் குழுவும் சம்பள மாற்றமும்

கிளரிவிடப்பட்ட உணர்வுகளைச் சாந்தப்படுத்துவதற்காக, அரசு 1946ஆம் ஆண்டு டிசம்பரில் ரூ.20 முதல் ரூ.150 வரையிலான போனசையும், மிகச்சொற்ப தொகையை இடைக்கால நிவாரணமாகக் கொடுத்துவிட்டு மூன்று அமைச்சர்கள் அடங்கிய ஒரு துணைக் கமிட்டியை ஏற்படுத்தியது. 1. வருவாய்த் துறை அமைச்சர் கரந்த் 2. பொதுப்பணித் துறை அமைச்சர் பக்தவச்சலம் 3. உள்ளாட்சித் துறை அமைச்சர் டேனியல் தாமஸ்

அரசு ஊழியரின் சம்பள விகிதங்களை மாற்றி அமைக்க அமைக்கப்பட்ட இக்கமிட்டிக்குச் சம்பளக் கமிட்டி என்று பெயர்.

சங்கத்திற்குத் தன் தரப்பு நியாயங்களைச் சொல்ல வாய்ப்பு ஏதும் தராமலேயே இக்கமிட்டி தன் பரிந்துரைகளை இறுதி செய்தது. மத்திய அரசாங்கத்தின் முதலாம் சம்பளக் கமிஷனின் பரிந்துரை வெளியிடப்படும் வரை பொறுத்திருக்க வேண்டும் என்ற சங்கத்தின் வேண்டுகோள் பயனற்றுப் போயிற்று.

அமைச்சரவைத் துணைக் குழுவின் அவசர முடிவுகள் 1947 பிப்ரவரியில் அரசாணையாக வெளியிடப்பட்டன.

ஊழியர்களை பிளவுபடுத்தும் நோக்கத்தில்

தலைமைச் செயலக எழுத்தருக்கு ரூ.51 - ரூ.100

இதர எழுத்தருக்கு ரூ.45 - ரூ.90

என்ற ஊதியவிகிதங்கள் அமுல்படுத்தப்பட்டதால் ஊழியர்களிடையே கடும் அதிருப்தி

இதன்பின்னர் முதலாவது மத்திய ஊதியக் குழுவின் பரிந்துரைகள் மீதான ஆணைகள் 1.1.1947 முதல் அமலாகும் வகையில் வெளியிடப்பட்டன

இதனால் மத்திய மாநில அரசு ஊழியர்களிடையே ஊதிய வேறுபாடு அதிகரிப்பு

22.8.1947ல் விசாகப்பட்டினத்தில் மாநில மாநாடு கே.ஜெகதீச ஐயர் தலைமை

வேலை நிறுத்தத் தயாரிப்பு நடவடிக்கைகயில் ஈடுபடுவது. 8.9.1947 முதல் 13.9.1947 வரை என்.ஜி.ஓ. வாரம் அனுஷ்டிப்பது என முடிவு

சென்னை சட்டமன்றத்தில் என்.ஜி.ஓ.க்கள் கோரிக்கை குறித்துப் பேச எம்.எம்.அன்வர், முகமது இஸ்மாயில் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்டுவந்த ஒத்திவைப்பு தீர்மானங்களுக்கு அனுமதி மறுப்பு

18.10.1947ல் வேலூரில் மத்திய செயற்குழு கூடி வேலை நிறுத்த வாக்கெடுப்பு நடத்த முடிவு

95% ஊழியர்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்

15.12.1947 முதல் 22.12.1947 முடிய வேலை நிறுத்தம்

அரசு, சங்கத்துடன் பேச முன்வரவில்லை. பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

1.12.1947 முதல் சங்க அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டது

தலைவர் ஜெகதீச ஐயருக்கும், பொதுச் செயலாளர் அருளப்பாவுக்கும் குற்றக் குறிப்பாணைகள் வழங்கப்பட்டன

144 தடை உத்தரவு போட்டு சங்கக் கூட்டங்கள் ரத்து செய்யப்பட்டன

சங்கத் தலைவர்கள் எஸ்மா சட்டத்தின்கீழ் கைது

சென்னையில் ஊழியர்கள் மீது போலீஸ் தடியடி, கண்ணீர்ப் புகைக் குண்டு வீச்சு

காங்கிரஸ் தலைவர்கள், போராட்டத்திற்கு எதிராக அறிக்கை விட்டனர்

திரு.கு.காமராஜ் - சென்னை

திரு.கேளப்பன் - கேரளா

திரு.என்.ஜி.ரங்கா - ஆந்திரா

பத்திரிகைகளும் போராட்டத்தை எதிர்த்தன.

தந்தை பெரியார் தமிழர்களுக்கு எதிராக பார்ப்பனர்கள் தூண்டி விட்ட போராட்டம் என இதை வர்ணித்து எதிர்ப்பு அறிக்கை விட்டார்

மாவட்ட காங்கிரஸ் கமிட்டிகள், உடைப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்

சங்கத்திற்குள்ளேயே சிலர் இப்போராட்டத்திற்கு எதிராக அரசியல் சாயம் பூச முற்பட்டனர்

எதிர்ப்பு பலமாக இருந்தாலும் 21.12.1947 வரை வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றது

மாணவர், சங்கம், விவசாய சங்கம், தொழிற் சங்கங்கள் ஆதரவளித்தன

கம்யூனிஸ்ட் கட்சியும், சோஷலிஸ்ட் கட்சியும் ஆதரவளித்தன

சக்கரை செட்டியார், எம்.ஆர்.வெங்கட்ராமன் ஆகியோர் நிதியமைச்சர் கோபால் ரெட்டியை நேரில் சந்தித்து வேலை நிறுத்தம் முன்வைத்த கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரினர்.

வேலை நிறுத்தமானது அமைதியானதாகவும் முழு வெற்றியாகவுமாயிருந்தது. பேச்சுவார்த்தைகளின் மூலம் கோரிக்கைகளையும், ஊழியர்களின் உரிமைகளையும் ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக அரசு, சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்து செய்தது.

144 தடை உத்தரவு பிறப்பித்து சங்கக் கூட்டங்களுக்குத் தடை விதித்தது. பல தலைவர்களை அத்தியாவசியப் பணிகள் சட்டத்தின்படி கைது செய்தது. சென்னையில் கூடியிருந்த ஊழியர்களை விரட்டத் தடியடியும், கண்ணீர்புகைக் குண்டுகளும் பயன்படுத்தப்பட்டன.

நூற்றுக்கணக்கான தலைவர்களும், முன்னணி ஊழியர்களும் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

அப்போதுதான் சுதந்திரம் பெற்று ஏக அதிகாரத்திலிருந்த ஆளும் கட்சியே மக்களை ஊழியர்களுக்கு எதிராகத் தூண்டியது. பத்திரிகைகளும் போராட்டத்திற்கு எதிராக இருந்தன.

ஆனால் பல தொழிற் சங்கங்களும், கம்யூனிஸ்ட் கட்சியும், சோசலிஸ்ட் கட்சியும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக இருந்ததால், அவற்றின் தலைவர்கள் சிலரும் கைது செய்யப்பட்டனர்.

தோழர் வெங்கட்ராமன், முருகேசன் போன்ற கம்யூனிஸ்ட் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். சட்டப் பேரவையில் கம்யூனிஸ்ட் தலைவர் அனந்த நம்பியார், முஸ்லிம் லீகின்கலாம், ஃபாரூக் லத்தீக் ஆகிய எம்.எல்.ஏ.க்கள் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவாக வலியுறுத்திப் பேசினர்.

உள்ளுக்குள் இருந்து ஒரு சில பிரிவினர் வேலை நிறுத்தத்திற்கே ஒரு சாதிய மற்றும் சமூக சாயம் பூச முற்பட்டனர். வேலை நிறுத்தத்திற்கு எதிரான பிரச்சாரம் பத்திரிகைகளின் மூலம் தீவிரப்படுத்தப்பட்டது.

வேலை நிறுத்தமானது நாடு சுதந்திரமடைந்தவுடன் நடத்தப்பட்டதால் அரசுக்கு மக்களிடையே வெகுவான ஆதரவு இருந்தது. ஆனால், வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு என்பது மிகச் சொற்பமே.

புதிய ஆட்சியாளர்கள் ஜனநாயக முறைப்படி நடந்து கொள்வார்கள் என்று அரசு ஊழியரன் எதிர்பார்ப்புகளும் கற்பனைகளும் தகர்க்கப்பட்டன. ஆட்சியாளர்கள் ஒரு குடியரசு நாட்டிலும் ஆட்சியாளர்களே என்ற கருத்து உழைக்கும் மக்களிடையே நன்கு உணரப்பட்டது.

ஒட்டுமொத்தத் தாக்குதலையும் தாக்குப்பிடிக்கும் பலம் சங்கத்திற்கு அப்போது இல்லை. கொள்கையிலே பிடிப்பில்லாத ஒரு சில தலைவர்களினால் வேலை நிறுத்தம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது.

தலைவர்களிடையே கூட்டான கலந்தாலோசனையோ, கருத்தொருமித்த முடிவோ இல்லாமல் ஒரு சிலரால் அரசுடன் ரகசியமாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, டிசம்பர் 22ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது.

சம வேலைக்குச் சம ஊதியம் என்ற அடிப்படையில் அரசு ஊழியர் சமூக அந்தஸ்தையும், கௌரவத்தையும் உயர்த்த எடுக்கப்பட்ட முயற்சி இப்படியாகத் தோற்கடிக்கப்பட்டது.

வேலை நிறுத்தத்திற்கு பிறகு பழிவாங்கலாகப் பலரைப் பணியிறக்கம் செய்தது. வருடாந்திர ஊதிய உயர்வை நிறுத்தி வைத்தது.

தற்காலிக ஊழியரை பணி நீக்கம் செய்தது மற்றும் பதவிவாரி மற்றும் துறைவாரிச் சங்கங்கள் அமைவதை ஊக்குவித்தது.

இறுதியில் பழி வாங்கும் நடவடிக்கைகள் இருக்காது என்ற உத்தரவாதத்தை மட்டும் பெற்றுக்கொண்டு வேலை நிறுத்தம் விலக்கிக் கொள்ளப்பட்டது

## படிப்பினைகள்

விடுதலைப் போராட்டத்தை தலைமையேற்று நடத்திய காங்கிரஸ் கட்சி தலைமையிலான அரசின் குணாம்சம் வெளிப்பட்டது.

வெள்ளையரோ அல்லது இந்தியரோ, ஆட்சியாளர்கள் என்பவர்கள் ஆட்சியாளர்களே என்பது நிரூபணமானது.

போராட்ட வேளையில் எதிரி யார்? நண்பர் யார்? என்பதை வெளிப்படுத்தியது

ஆட்சியாளர்களும், அரசுகளும், பிற்போக்கு சக்திகளும் போராட்டத்தை எப்படியெல்லாம் சதி செய்வார்கள் என்பதை வெளிப்படுத்தியது

தாக்குதலைத் தாக்குப்பிடிக்கும் தன்மையை ஊழியர்களும், தலைமையும் வளர்த்துக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டியது

பலவீனமான பகுதிகள் பிரித்தாளும் சூழ்ச்சிக்கு எளிதில் இரையாகும் என்பதை வெளிப்படுத்தியது

இதன்பின்னரும் பழி வாங்கும் நடவடிக்கைகள் தொடர்ந்தன.

தற்காலிக ஊழியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர்

விசுவாச ஊழியர்கள் () பணி நிரந்தரம் செய்யப்பட்டனர்

ஜெகதீச ஐயர் பணிநீக்கம் செய்யப்பட்டார்

துறைவாரி சங்கங்கள் ஊக்குவிக்கப்பட்டன

தலைமைச் செயலக சங்கத்திற்கும், கடைநிலை ஊழியர் சங்கத்திற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டது

மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட்டதால் 1953ல் கேரளா, ஆந்திர, கர்நாடகப் பகுதிகள் பிரிந்தன

1957ல் 15வது முத்தரப்பு மாநாடு - தேவைக்கேற்ற குறைந்தபட்ச ஊதியம்

1959ல் தமிழக முதலாவது ஊதியக் குழு அமைக்கப்பட்டு 1960ல் அமல்படுத்தப்பட்டது

1960ல் AISGEF உருவானது (அரவிந்தகோஷ், ஸ்ரீராமுலு, வரதராவ், எம்.ஆர்.அப்பன் (த.நா.)

மத்திய அரசுக்கு இணையான ஊதியம் மற்றும் பஞ்சப்படி போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன

1967 பொதுத் தேர்தல் - எட்டு மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி தோல்வி

தமிழகத்தில் திமுக ஆட்சி

அரசு ஊழியர்கள், ஆசிரியர்களிடையே திமுகவின் செல்வாக்கு அதிகரித்தது

என்.ஜி.ஓ. சங்கத் தலைமையிடமும் இதன் தாக்கம் இருந்தது

சங்கத் தலைமை (திரு.தேவநாதன்) அரசியல் சார்பு இன்மை என்ற நிலையிலிருந்து விலகி ஆட்சியாளர்களுக்கு வெளிப்படையான ஆதரவுடன் செயல்பட்டது

ஊழியர்களை ஒன்றுதிரட்டுவதற்குப் பதிலாக ஆட்சியாளர்களுடன் நெருக்கத்தை உருவாக்கிக் கொள்வதிலேயே கவனம் செலுத்தியது

சங்கத்தின் மீது கவனமில்லாத தலைமையின் இந்தப் போக்கு மாவட்ட/வட்டங்களிலும் எதிரொலித்தது. சங்கம் கட்டுக்கோப்பையும், போர்க்குணத்தையும் இழந்தது

ஊழியர்களிடம் கோரிக்கைகளை எடுத்துச் செல்லாத காரணத்தால், கோரிக்கை உணர்வும், சங்க உணர்வும்கூட மங்கிப் போனது

1969ல் முதல்வர் சி.என்.அண்ணாதுரை மரணம் - கலைஞர் முதல்வராகிறார்

தமிழக இரண்டாவது ஊதியக் குழு 1962ல் அமைக்கப்பட்டு அதன் பரிந்துரைகள் 2.10.1970 முதல் அமுலுக்கு வந்தது

இந்த ஊதியக் குழு அமைக்கப்பட்டபோது, ஆசிரியர்களுக்கு தனியானதொரு ஊதியக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியின் பொதுச் செயலாளரால் எழுப்பட்டது. ஆனால், அரசு இதை ஏற்கவில்லை.

1969ல் என்.ஜி.ஓ. சங்கத் தலைவருக்கு போட்டியிட்ட சிவ.இளங்கோ தோல்வியடைந்தார்

1969-70 காலகட்டத்தில் அரசுப் பணியில் புதியதாக சேர்ந்த ஏராளமான இளைஞர்கள் என்.ஜி.ஓ. சங்கம் மற்றும் துறைச் சங்கங்களில் வேகமாக செயல்பட ஆரம்பித்தனர்

2வது ஊதியக் குழு பரிந்துரைகளில் ஏராளமான முரண்பாடுகளும், குளறுபடிகளும் இருந்தன. எதிர்பார்த்த பலன் கிடைக்காததால் அதிருப்தியடைந்த ஊழியர்கள் மத்தியில் கடும் கோபம் நிலவியது.

ஆனால், குறைபாடுகளைக் களைவதற்கான போராட்ட நடவடிக்கைகளில் ஈடுபட சங்கத் தலைமை தயாராக இல்லை.

அதேநேரத்தில் என்.ஜி.ஓ. சங்கத்தில் செயல்பட்டு வந்த பலர் சங்கத்தைப் பலப்படுத்தி, கோரிக்கைகளுக்காகப் போராட வேண்டும் என்று வலியுறுத்தி வந்தனர். இவர்களே பின்னாளில் நடவடிக்கை குழுத் தலைவர்களாகவும், அரசு ஊழியர் சங்கத்தின் நிறுவனத் தலைவர்களாகவும் பரிணமித்தனர்.

1971ல் இவர்கள் சிவ.இளங்கோ தலைமையிலான தனி அணி அமைத்துப் போட்டியிட்டு அரசின் விசுவாசியாக இருந்த சங்கத் தலைமையை தோற்கடித்தனர். ஜே.எஸ்.பரதன் துணைத் தலைவராகவும், எம்.ஆர்.அப்பன் பொருளாளராகவும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

1971ல் என்.ஜி.ஓ.சங்கம் AISGEF-உடன் இணைக்கப்பட்டது.

தமிழக அரசு ஊழியர் இயக்கத்தை தேசிய நீரோட்டத்தில் இணைப்பதற்காக தலைவர்களின் கடுமையான முயற்சியினாலேயே இது சாத்தியமானது.

ஆனால், என்.ஜி.ஓ. சங்கத் தலைமைக்கு, அரசின் நலன்களே அரசு ஊழியர்களின் நலன்களைவிடப் பெரிதாக இருந்தன.

விலைவாசிப் புள்ளி அடிப்படையில் வாலாயமாக வழங்க வேண்டிய பஞ்சப்படியைக்கூட, அரசு முதல்வரின் பிறந்த நாள் பரிசு, பொங்கல், தீபாவளி பரிசு என அறிவித்து அற்பத்தொகையை கொடுத்து ஏமாற்ற முற்பட்டது.

சங்கத் தலைமையோ, பஞ்சப்படிக்காகவோ, இதர கோரிக்கைகளுக்காகவோ போராட முன்வரவில்லை.

1972ல் சேலத்தில் மாநாடு கூட்டி, 'கண்ணீரைத் துடைப்பார் கலைஞர்' என்ற தலைப்பில் கவியரங்கம் நடத்தி தலைமை அரசுக்கு ஆலவட்டம் சுற்றியது

ஆனால், மாநாட்டுப் பேரணியில் கலந்துகொண்ட பல்லாயிரக்கணக்கான ஊழியர்கள், 'வடிக்காதே வடிக்காதே நீலிக்கண்ணீர் வடிக்காதே', 'நிதியில்லை என்று சொல்லாதே' என ஆவேசமான கோஷங்களை எழுப்பினர்

மாநாட்டில் கருணாநிதி என்ற பெயரிலேயே கருணையும் நிதியும் இருக்கிறது என்று சங்கத் தலைமை ஜால்ரா அடித்து கருணையோடு நிதியை வாரி வழங்க வேண்டும் எனக் கெஞ்சியது

ஆனால், கலைஞரோ, கருணைக்கு மூன்றெழுத்து, நிதிக்கு இரண்டெழுத்து என்பதால் நிதி குறைவாக இருக்கிறது. தரமுடியாது என வார்த்தை விளையாட்டு நடத்திவிட்டு, ரகசியக் குறிப்பேட்டு முறை (Personal File System) ஒழிப்பதாக மட்டும் அறிவித்துவிட்டுச் சென்றுவிட்டார்.

மாநாட்டிலேயே போராட்டத்தை அறிவிக்க வேண்டும் என ஊழியர்கள் கொந்தளித்தனர். ஆனால், மத்திய செயற்குழுவைக் கூட்டி விவாதிப்போம் எனக் கூறிவிட்டு தலைமை ஓடி ஒளிந்தது.

இதற்கிடையில் ஒரு நபர் குழுவின் பரிந்துரைகள் 4.9.1972 முதல் அமுலுக்கு வந்தன. அதன்படி இளநிலை உதவியாளர்களின் சம்பளம் ரூ.200-லிந்து ரூ.210ஆக உயர்த்தப்பட்டது.

என்.ஜி.ஓ. சங்கத் தலைமை 'இரண்டாண்டுப் பயிற்சி என்ற மாயையை வேரோடும், வேரடி மண்ணோடும் வெட்டிச் சாய்த்தோம்' எனக் கொக்கரித்தது. இதனால் இடைநிலை ஆசிரியர்கள் என்.ஜி.ஓ.க்களுக்கு எதிரானார்கள்.

1973ல் பட்டதாரி ஆசிரியர்கள் போராடி ஆயிரக்கணக்கில் சிறை சென்றார்கள். எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு விடைத் தாள்கள் திருத்தும் பணியை புறக்கணிக்கும் போராட்டத்தை அறிவித்தார்கள்.

பட்டம் பெற்ற என்.ஜி.ஓ.க்களை விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடுத்துவோம் என என்.ஜி.ஓ. சங்கத் தலைமை அறிவித்தது. ஆக, பட்டதாரி ஆசிரியர்களும் அரசு ஊழியர்களுக்கு எதிரிகள் ஆகிப்போனார்கள்.

அரைத்த மாவையே அரைக்கும் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளம் ஒரு கேடா? என என்.ஜி.ஓ. சங்கத் தலைமையும், குமுதம் படிக்கும் குமாஸ்தாவுக்குக்கூடச் சம்பளம் ஒரு கேடா? என ஆசிரியர் சங்கத் தலைமையும் கூக்குரலிட்டுக் கொண்டு இரு தரப்பினருமே குறைந்த சம்பளம் பெற்றார்கள்.

ஆக பிரித்தாளும் அரசின் சூழ்ச்சிக்கு சங்கத் தலைமைகளே இரையாகிப் போயின

1972 டிசம்பர் 5 முதல் 1973 ஜனவரி 3 முடிய ஐ.டி.ஐ. ஊழியர்கள் வேலை நிறுத்தம்

452 பேர் தற்காலிகப் பணிநீக்கம்

10 தோழர்கள் கைது செய்து சிறையிலடைப்பு

தோழர் எம்.ஆர்.அப்பனை அரசியல் சாசன விதி 311(2)(சி)-ன் கீழ் பணிநீக்கம் செய்திட அரசு முடிவு - ஆளுநர் நிராகரித்தார்

எம்.ஆர்.அப்பன், ஜே.எஸ்.பரதன் உள்ளிட்ட தலைவர்களை சங்கத் தலைமை தற்காலிக பணிநீக்கம் செய்தது. கண்டித்த மாவட்டக் கிளைகள் கலைக்கப்பட்டன.

1973ல் தேர்தல் நடத்த வேண்டும். ஆனால், அதற்கு மாறாக தஞ்சை கரந்தை தமிழ்க் கல்லூரியில் மாநில செயற்குழு கூட்டி அதையே மாநில பிரதிநிதித்துவப் பேரவை என அறிவித்து சங்க சட்ட விதிகள் திருத்தம்

இரண்டாண்டுப் பதவிக்காலம் மூன்றாண்டுகளாக நீடிப்பு.

அப்போதைய நிர்வாகிகளே அடுத்த மூன்றாண்டுகள் பதவியில் நீடிக்க அனுமதி.

## நடவடிக்கைக் குழு அமைக்கப்படுதல் (Action Committee)

இயக்கத்தில் ஜனநாயக மரபுகளை மலரச் செய்யவும், ஊழியர்களை ஒன்றுதிரட்டி அதன்மூலம் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணவும், கலைக்கப்பட்ட மாவட்டக் கமிட்டிகள் மாநில அளவில் ஒன்றிணைந்து ஒரு நடவடிக்கைக் குழுவை ஏற்படுத்தின.

என்.ஜி.ஓ. சங்கத் தலைமை மென்மேலும் ஊழியருக்கு எதிரானதாயிற்று. போராட்ட காலத்திலிருக்கும் அரசு ஊழியரையும், ஆசிரியர்களையும் காட்டிக் கொடுக்கும் நிலைபாட்டை எடுத்தது மற்றும் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் நடவடிக்கைகளை எதிர்க்கும் நிலையையும் எடுத்தது.

எனவே, 1974ல் அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்திலிருந்து துண்டிக்கப்பட்டது.

நடவடிக்கைக் குழுவோ பஞ்சப்படி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டாலோ அல்லது பஞ்சப்படி வரையறுக்கப்பட்டு மறுக்கப்பட்டபோதோ, ஊழியர்களைத் திரட்டி ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது.

இக்குழுவின் தலைவர்களும் முன்னணி ஊழியர்களும் பதவியிறக்கம், தற்காலிகப் பணி நீக்கம், வருட ஊதிய உயர்வு நிறுத்தம் மற்றும் மாறுதல் இவை போன்ற பழி வாங்கலுக்கு ஆட்பட்டனர்.

பஞ்சப்படி வரையறுக்கப்பட்டதால் 8 தவணைப் பஞ்சப்படிகள் மறுக்கப்பட்டன. ஆதலால், தமிழக அரசு ஊழியர் சம்பளம் இந்தியாவிலேயே கடைநிலைக்குத் தள்ளப்பட்டது.

என்.ஜி.ஓ. சங்கத் தலைமை அரசுடன் கைகோர்த்துக் கொண்டதாலேயே இந்நிலை ஏற்பட்டது. 1977 பொதுத் தேர்தலில் திமுக, அதிமுகவால் தோற்கடிக்கப்பட்டது.

1977ல் ஒரு சம்பளக் கமிஷன் அமைக்கப்பட்டது. இது இடைக்காலத்திலிருந்த ஜனாதிபதி ஆட்சியில் தேர்தலுக்கு முந்திய கிளர்ச்சிகளின் காரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோரிக்கையாக இருந்தது.

எனினும் இடைக்கால நிவாரணம் மறுக்கப்பட்டது. இது ஊழியரிடையே மிக்க மனக்கசப்பை ஏற்படுத்தியதால் மாநில முழுவதும் தர்ணாக்களும், கூட்டங்களும் நடத்தப்பட்டன.

## 1978-ல் காலவரையற்ற வேலை நிறுத்தம்

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனத்தின் அறைகூவலுக்கிணங்க நடவடிக்கைக் குழு தமிழ்நாடு முழுவதும் பெருவாரியான ஊழியரைத் திரட்டிப் பல போராட்டங்களை 1978 ஆரம்பத்தில் நடத்தியது.

இக்குழு மாநிலத்தில் உள்ள பல அமைப்புகளும் ஒன்றிணைந்து பொதுவான ஒரு போராட்ட நடவடிக்கையில் ஈடுபட அறைகூவல் விட்டது. ஆனால், மற்ற சங்கங்களின் தலைமைகள் ஒன்றுபட்ட போராட்டத்திற்கு இணங்கவில்லை.

தனித்தனியாக தர்ணாக்களும், பிற போராட்ட நடவடிக்கைகளுக்கும் அறைகூவல் விடப்பட்டன. பட்ஜெட்டில் அரசு ஒரு மாதத்திற்கு மட்டும் ரூ.25 மற்றும் ரூ.15 என்று அறிவித்தது ஊழியர்களிடையே பரவலான அதிருப்தியை ஏற்படுத்தியது.

ஊழியர்களின் போராட்டங்களைத் தன் தலைமையில் மக்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று முதலமைச்சர் அறிவித்தது எரியும் நெருப்பில் எண்ணெய் வார்த்ததாயிற்று. எனவே, மறியல்களும், தர்ணாக்களும், பேரணிகளும் பொதுக்கூட்டங்களும் எங்கும் நடத்தப்பட்டன.

1978 மார்ச் 3ஆம் நாள் மறியல் போராட்டம் நிறைவடைந்தபோது அனைத்துத் தரப்பு ஊழியர்களும் பங்கேற்கும் தொடர்ச்சியான நடவடிக்கை வேண்டுமெனத் தலைமையை ஊழியர்கள் நிர்ப்பந்தித்தனர்.

இவ்வாறு காலவரையற்ற வேலை நிறுத்தம் தன்னிச்சையாக தொடங்கியது.

சென்னை நகரில் பல அலுவலகங்களுக்கும் பிற மாவட்டங்களுக்கும் வேலை நிறுத்தம் 4ஆம் தேதி பரவியது. வேலை நிறுத்தத்தில் மறுநாள் முதல் கலந்துகொள்வது என்ற நடவடிக்கைக் குழு மார்ச் 7ல் முடிவு செய்தது. 8ஆம் தேதி முதல் வேலை நிறுத்தம் முழுமையானதாக இருந்தது, ஊழியரிடையே நம்பிக்கையூட்டியது.

போராட்டத்தை நசுக்க அரசு பல நடவடிக்கைகளை எடுத்தது. 11ஆம் தேதி வரை போராட்டத்தை பல தலைமைகளும் தனித்தனியே நடத்திக் கொண்டிருந்தன. 12ஆம் தேதி பல அமைப்புகளும் அடங்கிய ஒரு போராட்டக் குழு அமைக்கப்பட்டது.

11ஆம் தேதியே அரசு ரூ. 10 மற்றும் ரூ.15ஐ இடைக்கால நிவாரணமாக அறிவித்தது. மேலும் சம்பளக் கமிஷனின் பரிந்துரைகள் 1978 ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அறிவித்தது.

இந்த அறிவிப்புகள் ஊழியர்களை திருப்திப்படுத்தவில்லை. போராட்டக் குழுவுக்கும் அரசுக்கும் இடையே நீண்ட பேச்சுவார்த்தைகள் நடந்தன.

ஊழியர்கள் போராட்டத்தைத் தொடர்வதற்குத் தயாராக இருந்தும், நடவடிக்கைக் குழு எதிர்த்தும் கூட போராட்டக் குழுவின் பெரும் பகுதியினர் போராட்டத்தை விலக்கிக் கொள்ள முனைந்தனர்.

இப்படியாக மார்ச் 14ஆம் தேதி இரவு போராட்டம் விலக்கிகொள்ளப்பட்டது. ஊழியர்களும் மனக்கசப்புடன் 15ஆம் தேதி முதல் வேலைக்கு திரும்பினர்.

அரசும் கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய்தது. வேலை நிறுத்த காலத்தை விடுப்புக் காலமாக்கி உத்தரவிட்டது.

## நடவடிக்கைக் குழு கலைக்கப்படுதல்

போராட்டத்திற்கு பிறகு அரசின் ஆசியுடன் அரசு அலுவலர் கழகம் (சி மற்றும் டி பிரிவு) என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.

இச்சங்கம் அரசின் சங்கம் என்றும், அரசு நலன் காக்க, அரசாலேயே நடத்தப்படுவதாகவும் வெளிப்படையாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்படிப்பட்ட பொறுப்புகளுக்கு நடுவில் எல்லோரும் பங்கேற்கக்கூடிய தேர்தல் ஒன்று என்.ஜி.ஓ. சங்கத்திற்கு நடத்தப்பட்டது.

நடவடிக்கைக் குழுவின் பெருவாரியான ஆதரவாளர்கள் சங்கத்தின் அங்கத்தினராகக்கூட ஏற்கப்படா விட்டாலும், இத்தேர்தலை பயன்படுத்தி அமைப்பில் ஒற்றுமையை ஏற்படுத்தவும் தேர்தலில் பங்குகொள்ளவும் நடவடிக்கைக் குழு முடிவு செய்தது.

ஆனால் அதிகாரத்திலிருந்த பிரிவினரே தேர்தலில் வெற்றி பெற்றனர். எனவே, ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காக நவம்பர் 1978ல் நடவடிக்கைக் குழு ஏனமகதாகக் கலைக்கப்பட்டது.

1979-80 ஆண்டுகளில் ஓய்வு பெறும் வயதை 58ஆக உயர்த்தக் கோரியும், ஈட்டிய விடுப்பை அரசுக்குச் சரண் செய்யும் வசதியைத் திரும்பத் தரக் கோரியும் அரசு அலுவலகங்கள் முன் மறியல் வரையிலான பல கட்டப் போராட்டங்கள் நடைபெற்றன.

1980ல் நடைபெற்ற இடைத் தேர்தலில் சங்கத்தின் பொதுச் செயலாளரையே ஒரு வேட்பாளராக நிறுத்தி, சங்கத் தலைமை வெளிப்படையாகவே அரசியலில் ஈடுபட்டது. ஆனால், தேர்தல் முடிவுகள் இவர்களுக்குப் பாதகமானதாக இருந்தது.

எனவே, தலைமை மீண்டும் தடுமாற்றமுடையதாயிற்று. ஆனால், துறைவாரி சங்கங்களின் போராட்ட நடவடிக்கைகளைத் தகர்ப்பதில் அது தயக்கம் ஏதும் காட்டவில்லை.

## அராஜகப் போக்கும் சரணடைதலும்

சங்கத்தை நடத்துவதில் தலைமை, தேர்தல்களை தள்ளிப் போடுவது, ஒரு நபர் தலைமையை வளர்ப்பது, ரௌடித்தனத்தை ஊக்குவிப்பது முதலான பல அராஜக நடவடிக்கைகளை மேற்கொண்டது.

எனவே, 1981ல் சங்க உறுப்பினர்களில் ஒரு பிரிவினர் பிரிந்து சென்று தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சங்கம் என்ற அமைப்பை ஏற்படுத்தினர். இச்சங்கம் செயல்படாது பெளரளவு சங்கமாக உள்ளது.

ஆனால், முந்தைய நடவடிக்கை குழுவிலிருந்தவர்கள் என்.ஜி.ஓ. சங்கத்திலேயே தொடர்ந்து உறுப்பினராக இருந்தனர். ஏனெனில், அரசு ஊழியர்களின் அனைத்து விதமான சங்க நடவடிக்கைகளையும் நசுக்குவதிலேயே கவனமாக இருந்தது.

1982ல் சங்கத் தலைமை பெருவாரியான உறுப்பினர்களின் பங்கேற்பில்லாமலும், போதுமான தயாரிப்புப் பணிகள் செய்யாமலும் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டது. 528 ஊழயர்கள் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

பொய் வழக்குகள் இவர்கள் பேரில் திணிக்கப்பட்டிருந்தது. இதற்கெதிராக ஊழியரைத் திரட்டாமலும், அவர்களுக்கு நம்பிக்கையூட்டும் நடவடிக்கைகள் ஏதும் எடுப்பதற்குப் பதிலாக தனது பல ஊழல்களை மறைத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தால் சங்கத் தலைமையே அரசிடம் சரணடைந்தது.

அரசோ, மேலும் மேலும் அராஜகப் போக்குடையதாகி ஊழியர்கள் கூட்டம் நடத்துவதைக் கூட பொறுத்துக் கொள்ள முடியாததாயிற்று. ஆனால், சங்கத்தின் முற்போக்கு சக்திகளோ இதை எதிர்த்தன.

சங்கத் தலைமையோ எதிர்ப்புக் குரலைப் பொறுத்துக் கொள்ளவில்லை. பதிலாக தேர்ந்தெடுக்கப்பட்ட 8 மாவட்ட கமிட்டிகளைக் கலைத்ததோடல்லாமல் 800க்கும் மேற்பட்ட அதன் முன்னணி ஊழியரை சங்கத்திலிருந்து வெளியேற்றியது.

## அரசு ஊழியர் சங்கத்தின் ஆரம்பம்


அரசு ஊழியர்களின் நலன்கள் இக்காலகட்டத்தில் யாராலும் பாதுகாக்கப்படவில்லை. இவர்களிடையே ஒற்றுமை ஏற்படுத்தவும் யாரும் எவ்வித முயற்சியும் செய்யவில்லை.

இந்நிலையில் ஊழியரின் உரிமைக்காகப் போராடவும், அவர்களின் கோரிக்கைகளை வென்றெடுக்கவும் புதிய ஒரு அமைப்பை ஏற்படுத்துவது அவசியமாயிற்று.

இந்த லட்சியங்களுக்காக 1984 மே 6ஆம் தேதி மதுரையில் பெருவாரியான ஊழியர்கள் பங்கேற்ற உற்சாகமான கூட்டத்தில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் துவக்கப்பட்டது.

இப்படி பல போராட்டங்களுக்குப் பின் உருவான இந்த இயக்கம், தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல் அரசு ஊழியர்களின் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடி வருகிறது. இந்த அமைப்பை ஸ்தாபிக்க நம் முன்னோடித் தோழர்கள் செய்த பெருந் தியாகங்களை நினைவுகூர்வது மட்டுமல்ல இந்த அமைப்பு தினத்தின் நோக்கம். அவர்கள் வியர்வை சிந்தி, உதிரம் உகுத்து பெற்றுத் தந்த உரிமைகளை விட்டுவிடாமல் பேணிக்காத்து அதை அடுத்த தலைமுறை அரசு ஊழியரிடம் ஒப்படைப்பதும் நம்முடைய தலையாய கடமையாகும். பெற்ற உரிமைகளை பேணிக் காப்போம்! இழந்த உரிமைகளை விரைந்து மீட்போம்! இதை அமைப்பு தின அறைகூவலாய் சூளுரைப்போம்! ❖

---



### எஸ்.கோவிந்தராசு பணி நிறைவு பாராட்டு

*தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தஞ்சை மாவட்டத் தலைவர் தோழர் எஸ்.கோவிந்தராசு வயது முதிர்வின் காரணமாக 30.4.2019 அன்று பணி ஓய்வு பெற்றார். அவரது அலுவலகத்தில் நடைபெற்ற பிரிவு உபச்சார விழாவின் போது ஏற்புரையின்போது எடுத்த படம்.* ❖

# ஏழை மகளின் கனவு மெய்ப்பட...

‘**கோ**மதி... கோமதி... இந்தப் பெயரை உச்சரிக்காதவர்களே கிடையாது. திருச்சியை திரும்பி பார்க்காதவர்களே இல்லை. ஆனால், இப்படி ஒரு நிகழ்வு நடந்து இருப்பதையே அறியாத அப்பாவியாக இருக்கிறாள் அந்தத் தாய்’’திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் போதிய பேருந்து வசதிகள் கூட இல்லாத மிகவும் பின்தங்கிய கிராமம் முடி கண்டம். இந்த கிராமத்திற்கு செய்தியாளர்களும் ஊடகவியலாளர் களும் படையெடுத்தனர். கிராமமே ஒன்று ஆச்சரியப்பட்டது. என்ன நடந்ததோ? ஏது நடந்ததோ? என முணுமுணுக்கிறார்கள்.



அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களிடம் கோமதி வீடு எங்கே இருக்கிறது என செய்தியாளர் ஒருவர் கேட்க மேலும் பதற்றம் தொற்றிக் கொள்கிறது. எதற்காக என்று ஒருவர் கேட்க? ஆசிய தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றிருக்கிறார் என்று ஊடக செய்தியாளர்கள் கூறியதைக் கேட்ட கோமதியின் உறவினர்களும் ஊர் மக்களும் இன்ப வெள்ளத்தில் நீந்தினர்.தோஹாவில் நடந்த ஆசிய ஓட்டப்பந்தயம் 800 மீட்டர் பிரிவில் கோமதி தங்கப் பதக்கத்தை வாங்கிய செய்தி வெளி யானதும், மு.க.ஸ்டாலின், கே.பாலகிருஷ்ணன், வைகோ, டிடிவி தினகரன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், முதலமைச்சர் எடப்பாடி என பலரும் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிலையில், அவருடைய வீட்டுக்கு செய்தியாளர்கள் சென்றபோது, அதுகுறித்து எதுவும் அறியாமல் இருந்தனர் கோமதியின் சகோதரிகள். அம்மா வயல் வேலைக்குப் போயிருக்காங்க என்ற தகவலைச் சொன்னதும் அவரை அழைத்து வரச் சென்று விடுகிறார்கள். ராஜாத்தியின் மகள்கள். கூலி வேலை பார்க்கும் ராசாத்தி அம்மாவின் வருகையை எதிர்பார்த்து செய்தியாளர்கள் காத்திருந்தனர்.

கூலி வேலை செய்துகொண்டிருந்த ராசாத்தி வீட்டிற்கு வந்ததும் செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்டனர். ‘‘எங்க மகள் கோமதி சின்ன வயதிலிருந்தே நல்லா விளையாடுவாள். எங்க ஊர் பள்ளிக்கூடத்தில் பள்ளிப் படிப்பை முடிச்சதும், திருச்சி கல்லூரியில் சேர்த்து விட்டோம். அந்த காலேஜுக்கும் பயிற்சிக்கும் போக காலையில 3 மணிக்கே எழுந்து நடந்து போய், அங்கிருந்து பஸ்ச பிடிச்சு போகவேண்டும். கல்லூரிக்கு சென்று வீட்டிற்கு திரும்ப வேண்டும்’’ என்றார்.

அவர் (கணவர்) உயிரோடு இருந்தவரை சின்ன புள்ளைக்கு ரொம்ப ஆதரவாக இருந்தார். அவ சாதிக்கணும்னு அடிக்கடி சொல்லிட்டே இருப்பார். அவருக்குப் புற்று நோய் இருக்குன்னு தெரிய வந்தப்ப எல்லாருமே கலங்கிப் போய்ட்டோம். வைத்தியம் எல்லாம் பார்த்தோம். ஆனாலும், நோய் முத்தி போனதுனால அவர் எங்களைவிட்டே போய்ட்டார். அதுல சின்ன புள்ள (கோமதி) இடிஞ்சு போயிட்டா. அவளை அதுலேருந்து தேத்திக்கொண்டு வர்றதுக்குள்ள போதும் போதும்னு ஆகிடுச்சு என்றும் கூறினார்.எங்க சொந்தக்கார பொண்ணு ஒன்னு ஓடிவந்து அக்காவ டிவியில காட்டுறாங்கனு சொன்னது. ஆனால், எனக்கு டிவி போடத் தெரியாது. அதனால கூலி வேலைக்குப் போயிட்டேன். இப்ப நீங்க வந்து சொல்றப்பதான் எனக்கு கோமதி தங்கம் வாங்கனதே தெரியும். ‘‘ரொம்ப சந்தோஷமா இருக்கு. இதுக்கு அவளோட முயற்சி மட்டும்தான் காரணம். அதற்கு பலனும் கிடைச்சிருக்கு’’ என்று கண் கலங்கினார் தாய் ராசாத்தி.

கோமதியின் தந்தை மாரிமுத்து விவசாயப் பண்ணையில் கூலி வேலை செய்து வந்தார். தாய் ராசாத்தி விவசாயக் கூலி வேலைக்குச் சென்று

வருகிறார். விவசாயக் கூலித் தொழிலில் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு தங்களின் நான்கு பிள்ளைகளைக் காப்பாற்றி வந்துள்ளனர். மூத்த மகன் சுப்பிரமணிக்கு ஊர்க்காவல் படையில் வேலை கிடைத்திருக் கிறது. அடுத்து பிறந்த மூன்று பெண் குழந்தை களில் கடைக்குட்டி தேவதை தான் கோமதி. பெண் குழந்தைகள் படிக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்திருக்கிறார் மாரிமுத்து. அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு படிப்பிலும் விளையாட்டிலும் அதிக ஆர்வம் காட்டியிருக்கிறார். கடந்த சில வருடங்களுக்கு முன்பு மாரிமுத்து உடல்நலக் குறைவால் இறந்துபோக இடிந்து போயிருக்கிறார் கோமதி. அந்த சமயம், ஒரு வேலை சாப்பிட, அரிசி இல்லாமல் கஷ்டங்களை அனுபவித்துள்ளனர்.

தந்தைக்குப் பிறகு, தன்னை சிறந்த வீராங் கனையாக உருவாக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக பயிற்சி கொடுத்து வந்த பயிற்சியாளர் காந்தியும் மாரடைப்பில் மரணம் அடைந்தது கோமதியை ரொம்பவும் மனசு உடைய வைத்திருக்கிறது. ''கொடும கொடு மன்னு கோவிலுக்கு போனா அங்க இரண்டு கொடும ஜிங்கு ஜிங்குனு ஆடுச்சு'' என்ற கதையாக கோமதிக்கு காலில் ஏற்பட்ட காயத்தால், விளையாடவே முடியாமல் அவதிப்பட்டார். ஆனாலும், விடாமுயற்சியில் விளையாட்டில் கவனம் செலுத்திவந்த கோமதி, விளையாட்டில் ஜெயிச்சே ஆகணும்னு வைராக்கியம் கொண்டார். அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். மகளின் விளையாட்டு ஆர்வத்திற்கு தூணாக நின்று ஊக்கம் கொடுத்த தந்தை மாரிமுத்து, சாதனை படைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுள்ளார். ஆனால், மகள் சாதித்ததை பார்ப்பதற்கு அவர் உயிரோடு இல்லை என்ற கவலை அவரது குடும்பத்தினரிடம் மேலோங்கியுள்ளது.

மூச்சுக்கு 300 முறை 'நானும் ஒரு விவசாயி' என்று சொல்லிக் கொள்ளும் முதல்வர் பழனிசாமி, ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, பல்வேறு சவால்களை கடந்து சாதித்துள்ள கோமதிக்கு, சல்லிக் காசு கூட வழங்காமல் வெறும் வாழ்த்துக் கடிதத்துடன் முடித்துக் கொண்டது விளையாட்டு ஆர்வலர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தடகளத்தில், அதுவும் 800 மீட்டர் ஓட்டம் போன்ற கடினமான பிரிவில் தமிழக வீராங்கனை வெற்றிபெறுவது அத்தி பூத்தார்ப் போன்றது. இந்த கூட்டத்தில் சாதித்த அந்த ஏழை விவசாய கூலித் தொழிலாளி மகளுக்கு திரைப்பட நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் ஒரு லட்சம் ரூபாய் வழங்கினார். சென்னை ஆலப்பாக்கம் வேலம்மாள் வித்தியாலயா பள்ளியின் சார்பில் நடந்த பாராட்டு விழாவில் அவரை ஊக்கப்படுத்தி மூன்று லட்சம் ரூபாய் வழங்கி கவுரப்படுத்தினர். திமுக தரப்பில் 10 லட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

கோமதிக்கு சின்ன வயசுல தடகளத்தின் மீது ஆர்வம் இல்லை. கல்லூரியில் படிக்கும்போது தான் ஓடத் தொடங்கியிருக்கிறார். கல்லூரிகளில் நடந்த பல்வேறு தடகளப் போட்டிகளிலும் வெற்றி பெற்று பல்வேறு பதக்கங்களையும், கோப்பைகளையும் வென்ற கோமதி, தேசிய அளவில் பதக்கம் வென்றார். பெங்களூரில் வேலை செய்து வந்தாலும் தான் வாங்கிய பதக்கங்களைக் கூட வைக்க இடமில்லாத வீட்டில் வளர்ந்த பெண் இந்தியாவிற்கு பெருமை தேடித் தந்ததை எண்ணி அவரது கிராம மக்கள் பெருமை கொள்கின்றனர்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி கொடுத்த கோமதி, ''எனது இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் எனது அப்பா மாரிமுத்துதான். இந்தியாவுக்கு பதக்கம் வாங்கி யதன் மூலம் எனது கனவு நிறைவேறியுள்ளது'' என்றார். மேலும், "எனக்கு தேவைப்படுகிற உதவிகளைச் செஞ்சு தர்றதா அரசு தரப்பிலேர்ந்து சொல்லியிருக்காங்க. வெளியிலேர்ந்தும் அன்பைக் காட்டுகிற நிறைய பேர் உதவ இருக்காங்க. இந்த உதவிகளை வெச்சுக்கிட்டே என்னால அடுத்தக்கட்டத்துக்குப் போய்ட முடியும். நான் அரசுக்கு வைக்கிற வேண்டுகோள் என்னான்னா, தமிழ் நாட்டோட ஒவ்வொரு மூலையிலும் என்னை மாதிரி நிறைய பேர் இருக்காங்க. அவங்களுக்கெல்லாம் இந்தக் கவனமோ, உதவியோ எதுவும் கெடைக்கலை. அவங்களை வெளியே கொண்டுவர அரசு முயற்சிக்கணும். சமூகம் உதவணும்'' என்றார்.

உலகக் கோப்பை சாம்பியன்ஷிப், ஒலிம்பிக் விளையாட்டிலும் பதக்கம் வெல்ல தயாராகி வரும் கோமதியின் கனவும் நிறைவேற நாமும் வாழ்த்துவோம்.

- நன்றி : தீக்கதிர்

# எட்டுமணி நேர வேலை உரிமையைத் திசையெட்டும் பாதுகாப்போம்




"எங்களைத் தூக்கிலிடுவதன் மூலம் தொழிலாளர் இயக்கத்தை நசுக்கி விடலாம் என்று நீங்கள் நினைத்தால்.. லட்சக்கணக்கான ஒடுக்கப் பட்டோரும், துன்பங்களில் உழல்வோரும் விடுதலைக்காக எதிர்பார்த்திருக்கும் இயக்கத்தை நசுக்கி விடலாம் என்று நினைத்தால்..இதுதான் உங்கள் எண்ணம் என்றால், எங்களைத் தூக்கிலிடுங்கள்! இங்கு நீங்கள் ஒரு சிறு தீப்பொறியின் மீது கால் வைக்கிறீர்கள்.. ஆனால் இங்கே.. அங்கே.. உங்களுக்குப் பின்னால்.. முன்னால்.. எங்கும் தீப்பந்தங்கள் ஒளிரும்! இது நீறுபூத்த நெருப்பு.. உலகம் முழுவதும் உழைப்பாளி மக்களுக்கு எதிரான அனைத்தையும் சுட்டுப் பொசுக் கும்! உழைப்பாளி மக்களின் வெற்றி சர்வ நிச்சயமே."

தூக்குமேடையில் மேதினத் தியாகிகள் முழங்கிய முழக்கமிது.

உலகம் முழுவதிலும் உழைப்பாளி மக்களின் உழைப்பு ஒட்டச் சுரண்டப்பட்ட காலமது. குறிப்பாக அமெரிக்காவில் அனலுக்கு அருகில் நின்று கொண்டு 15-17 மணி நேரம் உழைத்தார்கள். படகு ஓட்டுபவர்களுக்கு 15 மணி நேர வேலை. டிராம் ஓட்டுனர்களும் நடத்துனர்களும் காலை, மாலை என இரு பிரிவுகளாகப் பிரித்து மொத்தம் 15-16 மணி நேரம் வேலை பார்த்தார்கள்.

1872ன் குளிர் காலத்தில் பட்டினியால் வாடிய ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் "ரிலீஃப் அண்ட் எய்ட்சு சொசைட்டி" நோக்கி உணவு வாங்கப் பணம் கேட்டுப் பேரணி நடத்தினார்கள். அவர்கள் சிகாகோ நதியின் கீழே செல்லும் சுரங்கப் பாதைக்கு விரட்டியடிக்கப்பட்டார்கள். அங்கு தடியடி நடத்தப்பட்டது. இது சிகாகோ வரலாற்றில் " ரொட்டிக் கலவரம்" என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

1877 வாக்கில் தொழிலாளர்கள் வீதிகளில் இறங்க முதலாளிகள் அஞ்சி நடுங்கினார்கள். பத்திரிகைகள் மிகைப்படுத்தி எழுதி அச்சத்தை அதிகரித்தன. 1877 வேலைநிறுத்தம் கிழக்கே விர்ஜீனியா மற்றும் பென்சில்வேவேனியாவில் ஆரம்பித்தது. சிகாகோவில் ஜூலை 23 அன்று வேலை நிறுத்தம் துவங்கியது. தென்மேற்கே சிகாகோ, பர்லிங்டன் மற்றும் குவின்சி ரவுண்ட்

ஹவுஸ் பகுதிகளில் 8000 தொழிலாளர்கள் கூடினர். காவல்துறை மூவரைக் கொன்று, ஏழு பேரைக் காயப்படுத்தி, அந்த 8000 பேரையும் கலைத்தது. ஜூலை 26 அன்று சிகாகோவிற்கு மேலும் கூடுதலாக ராணுவத் துருப்புகள் வந்தன. அவையெல்லாம் தொழிலாளர்கள் மீது தாக்குதல் தொடுத்தன. இது 'வயாடக்ட் போர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பர்னிச்சர் தொழிலாளர் சங்கம் ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை பற்றி முதலாளிகளுடன் பேச ஏற்பாடு செய்திருந்தது. இக் கூட்டத்திற்கு மன்றத்திடம் உத்தரவும் வாங்கியிருந்தது. இருந்த போதிலும் காவல்துறையினர் கூட்டத்திற்குள் புகுந்து தடியடி நடத்தினர். தப்ப முயன்ற தொழிலாளிகளைச் சுட்டபோது டெஸ்மன் என்ற தொழிலாளி இறந்தார். அனுமதி பெற்று நடந்த போராட்டம் என்பதால் வழக்கு நீதிமன்றத்திற்குச் சென்றது. சிகாகோ காவல்துறையினரின் தவறைச் சுட்டிக் காட்டி ஒரு டாலர் அபராதம் விதிக்கப் பட்டது.

1877 ரயில்வே வேலைநிறுத்தம் தொழிலாளர் களுக்கு மூன்று விசயங்களை உணர்த்தியது. ஒன்று நகரத்தின் 'நிறுவனங்களை' எதிர்த்துப் போராட அவர்களுக்கு இன்னும் அதிகமான அரசியல் செயல்பாடுகள் தேவை என்பது. இரண்டாவதாக பெரிய செய்தித்தாள்களை நம்ப முடியாது என்பதால், தம் தரப்பு நியாயங்களை எடுத்துச் சொல்ல, அவர்களுக்கு என்று பத்திரிகைகள் வேண்டும். மூன்றாவதாக தொழிலாளர்கள் பலரும் போலீஸ் தாக்குதலைச் சமாளிக்க தங்களிடம் ஆயுதமேந்திய குழு இருக்க வேண்டும் என்று கருதினார்கள்.

1884-85களில் சிகாகோவில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டபோதும் மெக்கார்மிக் கம்பெனி தனது மூலதனமான இரண்டரை மில்லியன் டாலரில் ஆண்டுதோறும் 71 சத லாபம் ஈட்டியது. இதைப் புரிந்து கொண்ட தொழிலாளர்கள் 1884 முதல் தொடர்ச்சியான வேலைநிறுத்தங்களையும், கதவடைப்புகளையும் செய்து வந்தனர். இது 1886 மே வரை தொடர்ந்தது. 1886 மே 1ல் நாடெங்கிலும் உள்ள 12000 தொழிற்சாலைகளில் இருந்த 3 லட்சத்து 40 ஆயிரம் தொழிலாளர்கள் தங்கள் கருவிகளைக் கீழே போட இயக்கம் துவங்கியது. ஒரு சங்க நகரமாக சிகாகோ நகரின் பலத்தைக் காட்டும் வண்ணம் அங்கு 80000 தொழிலாளர்கள் இருந்தார்கள். போராட்டம் துவங்கும் முன்னரே, சிகாகோவின் 45000 தொழிலாளர்களுக்கு எட்டு மணி நேர வேலை அவர்களுக்கு உறுதி அளிக்கப்பட்டது.

மே2 ஞாயிறன்று சிறுசிறு ஊர்வலங்கள் நடந்தாலும் மே3 திங்களன்று மெக்கார்மிக் தொழிற்சாலை அருகே ஆகஸ்ட் ஸ்பைஸ் பேசிய கூட்டம், மே4 செவ்வாயன்று நடந்த ஹேமார்க்கெட் சதுக்கக் கூட்டம் என இரண்டு பெரும் கூட்டங்களும் ஈர்த்தன. 6000 தொழிலாளர்களுக்கு நடுவே ஒரு டிராம் வண்டியின் மீது ஏறி நின்று பேசிய ஆகஸ்ட் ஸ்பைஸின் சுருக்கமான உரைக்குப்பின் ஆல்பர்ட் பார்சன்சின் ஒரு மணிநேரப் பேச்சு முடிந்தது.

காவல்துறையினரின் திடீர் தாக்குதல் துவங்கியது. கூட்டங்களைக் கட்டுப்படுத்த பல மாதங்களாகப் பயிற்சி செய்து வந்த புதிய வகை ராணுவ அணிவகுப்பைக் காவல்துறையினர் பயன்படுத்தினர். வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டது. குண்டு காவல்துறையினரின் நடுவே விழுந்து ஒருவர் இறக்க, பலர் பலத்த காயமடைந்தனர். காவல்துறையினர் கூட்டத்தை நோக்கிச் சுட்டதில் நான்கு பேர் இறந்தனர். பதட்டத்தில் காவல்துறையினர் தமது ஆட்களின் மீதே சுட்டனர். காவல்துறையினர் ஆறு பேர் இறந்தனர். அடுத்த பல வாரங்களுக்கு சிகாகோவிலும், நாட்டின் பல பகுதிகளிலும் பேச்சுரிமை, கூட்டம் கூடும் உரிமை ஆகியவை தடை செய்யப்பட்டன. நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு இன மக்களின் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இத்தகைய வன்முறைக்கு 'நைட்ஸ் ஆப் லேபர்' என்ற அமைப்புதான் காரணம் என பழி சுமத்தப்பட்டது. செய்தித்தாள்கள், வர்த்தகர்கள், பின்னர் பொதுமக்கள் என தொழிற்சங்கங்களுக்கு எதிராகத் திரும்பினர். அனைவரும் சட்டம் ஒழுங்கு வேண்டும் என்று கூச்சலிட்டனர். இதன் தொடர்ச்சியாக எட்டு பேர் மீது குற்றம் சுமத்தப்பட்டு அதில் நால்வர் 1887 நவம்பர் 11 அன்று தூக்கிலிடப்பட்டனர்.

சிகாகோ நகரின் ஹப்பர்ட் தெரு காவல் நிலையத்திற்கு இடையில் உள்ள சந்தில்.. நடைபாதையில் தூக்குமேடை அமைக்கப்பட் டிருந்தது. அந்த மேடையின் முன்பாக பார்வை யாளர்களாக 200 பேர் கூடியிருந்தனர். அந்த தூக்கு மேடையில் ஆகஸ்ட் ஸ்பைஸ், பிஷர், எங்கேல், பார்சன்ஸ் ஆகிய நால்வரும் எவ்விதக்

கவலையுமின்றி தங்களுக்குரிய இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள். ஸ்பைசின் கழுத்தில் கயிறு இறுக்கமாக இருந்தது. அது சற்று வசதியாக சரி செய்யப்பட்டவுடன் அவர் புன்னகையுடன் 'நன்றி' என்றார். பின்னர் "இன்று நீங்கள் நெறிக்கும் எங்கள் மௌனம் மிகவும் சக்தி வாய்ந்ததாக மாறும் காலம் ஒன்று வரும்." என்றார் ஸ்பைஸ். அவரைத் தொடர்ந்து ஃபிஷரும், எங்கேலும் "இதுதான் எங்கள் வாழ்வின் மகிழ்ச்சியான தருணம் " என்றனர். கடைசியாக பார்சன்ஸ் "ஓ அமெரிக்கர்களே! நான் பேச அனுமதிக்கப்படுவேனா?..என்னைப் பேச விடுங்கள்! மக்களின் குரல் கேட்கட்டும்" என்றார். அடுத்த சில நிமிடங்களில் அந்த நால்வரும் நின்று கொண்டிருந்த அந்த மேடையின் அடிப்பலகை உருவப்பட்டது. உயிரற்ற அந்த நான்கு உடல்களும் அங்கே தொங்கிக் கொண்டிருந்தன.

நவம்பர் 13 அன்று மில்வாக்கி சாலையில் சிகாகோ நகர் மையம் வழியாக உணர்வுப் பூர்வமான பெருந்திரள் இறுதி ஊர்வலம் சென்று வால்ட் ஹைமில் முடிந்தது.

1889-ஜூலை 14ல் பாரீசில் பிரெஞ்சுப் புரட்சியின் நூற்றாண்டு விழாவில் சிகாகோ தியாகிகளின் நினைவாக மேதினம் சர்வதேசத் தொழிலாளர் தினமாக ஏற்கப்பட்டது. 1893- ஜூன் 25 அன்று வால்ட்ஹைம் கல்லறையில் தியாகிகள் நினைவுச் சின்னம் திறக்கப்பட்டது.

மேதினத் தியாகிகளின் ஒப்பற்ற தியாகத்தின் விளைவால் பெற்ற எட்டு மணி நேர வேலை உரிமை உலகமயமாக்கல் கொள்கையின் விளைவால் இந்தியா உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் பறிபோய்க் கொண்டிருக்கிறது. மூலதனத்தின் கோரத் தாண்டவம் தொழிலாளி வர்க்கத்தைச் செக்கிலிட்ட எள்ளாய்ப் பிழிகிறது. அரசுத்துறைகளில், தனியார் நிறுவனங்களில் என எங்கு நோக்கினும் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தொழிலாளர்கள் மீது பணிச்சுமை கூடுதலாக சுமத்தப்பட்டு உழைப்புச் சுரண்டல் அரங்கேறி வருகிறது. இதனால் எட்டு மணி நேர வேலை கேள்விக் குறியாகிவிட்டது.

மே தினத்தைத் தொழிலாளர்கள் இன்பமாகக் கொண்டாட இயலாத நிலையே முதலாளித்துவ நாடுகளில் நிலவுகிறது. மேதினத் தியாகிகளின் நினைவைப் போற்றும் அதே வேளையில் அவர்கள் எதிர்கொண்ட அடக்குமுறை உள்ளிட்ட தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை அரசு எனும் அடக்குமுறைக் கருவி பிரயோகித்த போதிலும் நம் முன்னோர்கள் போராடி, செங்குருதி சிந்தி, இன்னுயிர் நீத்துப் பெற்ற தொழிலாளர்களின் எட்டுமணி நேர வேலை உள்ளிட்ட உரிமைகளுக்கான வர்க்கப் போரினைத் தொடர்ந்து அர்ப்பணிப்புடன் முன்னெடுத்துச் செல்ல உறுதி ஏற்போமாக!

- **பெரணமல்லூர் சேகரன்**

# கோ.இளங்கோவன் பணி நிறைவு பாராட்டு விழா

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க திருவள்ளூர் மாவட்டத் தலைவரும், தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாநிலப் பொருளாளருமான கோ.இளங்கோவன் பணி நிறைவு பாராட்டு விழா 30.4.2019 அன்று திருவள்ளூரில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டத் தலைவர் இ.மணிகண்டன் தலைமையேற்றார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் எஸ்.காந்திமதிநாதன் வரவேற்றார். மாவட்ட ஆட்சியர் மகேஸ்வரி ரவிக்குமார் பணி ஓய்வு பெற்ற கோ.இளங்கோவனுக்கு அதற்கான சான்றிதழை வழங்கி சிறப்புரையாற்றினார்.

இதில் மாவட்ட துணை ஆட்சியர் ரத்னா, அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் மு.சுப்பிரமணியன், பொதுச் செயலாளர் மு.அன்பரசு, வருவாய்த் துறை அலுவலர் சங்க



மாநிலத் தலைவர் க.குமரேசன், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி பொதுச் செயலாளர் இரா.தாஸ், தலைமைச் செயலக சங்க நிர்வாகி வெங்கடேசன், ஆதிதிராவிடர் நலத்துறை ஊழியர் சங்கத்தின் ஜா.வே.அருள்டேனில், வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் கே.ஜெ.ஜெய்கர்பிரபு, சத்துணவு ஊழியர் சங்கத்தின இ.சந்திரசேகரன், நகர்மன்ற முன்னாள் தலைவர் ப.சுந்தரராசன் உட்பட பலர் வாழ்த்தி பேசினர். ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கத்தன் ஜி.மெல்கிராஜ்சிங் நன்றி கூறினார். ❖

# கொண்டாடுவோம் தோழியே! நமதமைப்பை!

அழைத்து மகிழும் வெறும் பெயரல்ல
அரசு ஊழியர் சங்கம்!
அரசு ஊழியர் வர்க்கம் தெரிந்து...பின்பற்ற
வேண்டிய கருத்து... தோழர் எம்.ஆர்.ஏ.
அரசு பணியா? தாமும், குடும்பமும் நன்றாக இருக்க
ஒவ்வொருவரும் உபதேசித்து கொண்டிருந்தபோது
அரசு துறைகளில் உழைப்பவர் அடிமைத்தனம்
அற்று பணிபுரிய வேண்டும் என்று
நடைமுறை படுத்தியது நமதமைப்பு! அன்று
அலுவலகம் உள்ளும் பேசத் தடை
அலுவலகம் வெளியும் பேசத் தடை!
காலணிகளை கழற்றி விட்டுத்தான்
அதிாரிகள் சந்திப்பு....?
உண்ணாவிரதம் தலைமையேற்பா... உடனடியாக
தற்காலிக பணிநீக்கம்! பணி ஓய்வு வரை!
காட்டி கொடுக்கும் கருங்காலிகள் தலைமையினால்
பதவி இறக்கம்... ஊதிய நிறுத்தம்...
போராட்ட போஸ்டர் ஒட்டியதால்
பதவி உயர்வு நிறுத்தத்தோடு... கைதும் உண்டு.
கண்களை குழப்பும் மின்னல்... போலே
கண்களே திறந்தாலும் எங்கெனும் அடக்குமுறை...
அழுத்தும் பணிநிலை... ஆளுக்கொரு புலம்பல்!
இத்தனைக்கும் மத்தியில் நம்பிக்கையுடன் 84
“மே 6” துவங்கியது ஒரு பசுந்தளிர்... மதுரையில்
அரசு தான் நமது அரசு ஊழியர் சங்கம்!
அடிமைபட்ட ஊழியர்களின்... இதயமெங்கும்
வீரத்தின் விளைநிலமாக கலந்தது அன்று!
போராட்ட உணர்வுகளும்...
உயர்த்திப் பிடித்த பதாகைகளும்...
எத்தனை முறை கைது செய்தாலும்
உழைக்கும் வர்க்க போராட்ட அலையில்
சித்தமாய்... மீண்டும்... மீண்டும் எழுந்தது!
சிறைபடுத்த முடியாத சிந்தனையாய்... நமதமைப்பு
அரசு ஊழியர் நெஞ்சில் கலந்தது... ஆம்!
அரசு ஊழியர் சங்கமா?... போராட்டங்களா?
அங்கீகாரமில்லையே! என்று
எள்ளி நகையாடிய எதிரிகளின் மூலையினும்
நம்பிக்கையின் நட்சத்திரமாய் நுழைந்தது!
என்ன செய்ய முடியும் உங்களால்?
கேட்டது... ஆளும் அரசும்! அதிகார வர்க்கமும்!
என்ன செய்ய வேண்டும்?... நாமும்
விடைகொடுத்தோமே 88ல்... தோழியே!
ஆண் தோழர்களின் அரணாக... ஒன்றுபட்டு
குதிரைப்படையை எதிர்கொண்டே
மத்திய அரசின் ஊதியம் பெற்றோம்!
காத்திருப்பு போராட்டத்திலும்...
தொடர் மறியல் போராட்டத்திலும்!
ஆண்களோடு... பெண்களும் இணைந்த
சரிநிகர் சமமான பங்களிப்பால்
அரசிடம் பல ஆணைகளை பெற்றோமே!
ஆதலால் தோழியே மகிழ்வுடன்
கொண்டாடுவோம்... நாமும்... நமதமைப்பை மே 6ல்.

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

---

## சி.பி.ஜெயராமன் பணி நிறைவு பாராட்டு விழா

**த**மிழ்நாடு பட்டு வளர்ச்சித் துறையில் தொடர்ந்து 29 ஆண்டுகளாக பணியாற்றி ஓய்வுபெற்ற சி.பி. ஜெயராமனுக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

பட்டு வளர்ச்சித் துறையில் துணை ஆய்வாளர், பட்டு வளர்ச்சித் துறை ஊழியர்கள் சங்க மாநில பொதுச் செயலாளர், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர், ஜாக்டோ-ஜியோ ஒருங்கிணைப்புக் குழு செயலாளர் என பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றியவர் ஜெயராமன். அவரது பணி நிறைவு பாராட்டு விழா தின்னூர் அலுவலகத்தில் நடைபெற்றது.

உதவி இயக்குநர் ஹரிலிங்கம் தலைமை தாங்கினார். நிர்வாக அலுவலர் காதர் முன்னிலை



வகித் தார். இணை இயக்குநர் செல்வச்சந்திரன் வாழ்த்திப் பேசினார். உதவி ஆய்வாளர் கண்ணாமணி நன்றி கூறினார்.அரசு ஊழியர்கள் சங்க மாவட்டத் தலைவர் சந்திரன் நிர்வாகிகள் நடராஜன், சீனிவாசலு, தேவராஜ், மணிகண்டன், கஸ்தூரி, கருப்பசாமி ஆய்வாளர் பொன்மாரி உள்ளிட்ட பலர் வாழ்த்திப் பேசினர். ❖

# சரிபாதி பெண்கள்! சமமானவர்களா?

"கொலை வாளினை எடுடா - மிகு
கொடியோர் செயல் அறவே"

கொடிய விலங்குகளை அடையாளம் கண்டு வாள் கொண்டு அழித்தல் போல் கொடுமனங் கொண்ட புல்லர்களின் செயல்திறனை அழிக்க வேண்டும். பொண்ணடிமை கருத்துக்களை உயர்த்திப் பிடிக்கும் மனுநீதி (மனுதர்மம்) ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் பல குறுகிய மன்னர்கள் சட்டமாக வைத்திருந்தனர். அன்றைய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் அதனை தடை செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், நாடாளு மன்ற தேர்தலின் தோல்வியின் பிடியில் உள்ள பாஜக ஆட்சி, அரசியல் அமைப்பு சட்டமாகவே ஏற்க வேண்டும், மாற்றப் போகிறோம் என்று கொக்கரிக்கிறது.

"பெண் என்பவர் பிறப்பதில்லை, உருவாக்கப் படுகிறாள்"

என்றார் பிரெஞ்சு பெண்ணியவாதி சைமன் டி.பௌவாயர்.

"பெண் இல்லாத வானிலோ அல்லது பூமியிலோ சூரியனில்லை, சந்திரனில்லை, விவசாயமில்லை, நெருப்புமில்லை" என்பது அரேபிய பழமொழி.

பெண்களே வரலாறு... அவர்கள் அவர்க ளாகவே வரலாறு படைக்கின்றனர்" என மேரி ரிட்டர் பியோர்ட் கூறுகின்றார்.

இப்படி வரலாறு நெடுகிலும் பெண்களை பற்றிய பெண் சமூகத்தின் சரிபாதியானவர், எண்ணிக்கையில், ஆற்றலில், உழைப்பில், பங்களிப்பில் என்று அனைத்திலும் ஆணுக்கு நிகராக இருப்பவள். பெண்ணின் உரிமைகள், வாய்ப்புகள், சமத்துவம் உறுதி செய்யப்படவும் இந்திய அரசியல் சட்டம், சர்வதேச உடன் படிக்கைகள், பிரகடனங்கள், இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட பெண்கள் மற்றும் விளிம்பு நிலை மக்களின் பாதுகாப்பு சட்டங்கள் என எல்லாம் இருக்கத்தான் செய்கின்றன.

கடந்த ஏப்ரல் 18-ல் நடைபெற்ற 17வது நாடாளுமன்ற தேர்தலிலும் ஆண்களை காட்டிலும் போராடி பெற்ற சமுதாய உரிமைகளை வாக்குரிமையை நிறைவேற்றியுள்ளோம். பெண்கள் பெரும் எண்ணிக்கையில் சாரை சாரையாக வந்து வரிசையில் நின்று வாக்களித்



தனர் என்பது குறிப்பிடத்தக்கது என்று தொலைக் காட்சிகளும், பத்திரிகைகளும் புகழாரம் தெரிவிக்கிறது.

இந்த ஆண்டும் நடந்து முடிந்த தேர்வு முடிவுகள் வெளியாகியுள்ள 10 மற்றும் 12ஆம் வகுப்பு தேர்வு முடிவுகளில் மாணவர்களை காட்டிலும் மாணவிகளே அதிக மதிப்பெண்ணும் அதிக அளவு தேர்ச்சியும் பெற்றுள்ளதையும் அனைவருக்கும் பெருமையே.

இந்தியாவுக்கு மட்டுமல்லாது பெண் இனத்திற்கே பெருமை சேர்த்த திருச்சியை சேர்ந்த விளையாட்டு வீராங்கனை தோஹாவில் நடந்த ஆசிய ஓட்டப்பந்தயம் 800 மீட்டர் பிரிவில் கோமதி பெற்ற தங்கப்பதக்கம் பல சோதனை களை, வறுமையை, இழப்பை தாண்டிய சாதனைகளை கொண்டாடும் நேரத்திலும், நமது நாட்டில் பெண்கள் ஜனாதிபதியாக, பிரதமராக, சபாநாயகராக, முதலமைச்சர்களாக, விளையாட்டு வீரர்களாக, விண்வெளி வீராங்கனைகளாக என அனைத்து துறைகளிலும் தடம் பதிப்பவர்களாக இருக்கிறார்கள் என பெருமை கொள்ளும் அதே நேரத்தில் பெண்களின் பாதுகாப்பு பெண் குழந்தைகளின் பாதுகாப்பும் சொல்லிக் கொள்ளும் நிலையில் இல்லை என்பதைவிட கடந்த காலங்களைவிட பெண்களின் வாக்குகளை அதிகமாக பெற்று ஆட்சிக்கு வந்த தமிழக அரசுக்கு இவையெல்லாம் பெண்ணினத்தின் மீதான கொடிய குற்றங்களாக படவில்லை. இப்படி ஒரு பிரச்சனை அரசின் கவனத்திலேயே இல்லை என்பதும் மறுபுறம் மத்தியில் நாட்டின் காவலாகியாக மாற்றிக் கொண்டுள்ள மோடி அரசோ பெண்களையும், குழந்தைகளையும் பாதுகாப்பதை மறந்துள்ளது என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும்.

இந்திய நாட்டின் தந்தை என்று போற்றப்படும் மகாத்மா காந்தியடிகள் கூறிய வரிகள்:

"ஒரு பெண் உடல் முழுவதும் நகையணிந்து எவ்வித பலமுமின்றி இரவு 12 மணிக்கு நடுரோட்டில் தனியாக பாதுகாப்பாக செல்கி றாளோ" என்று தான் இந்திய நாடு சுதந்திரம் அடைந்ததாக அர்த்தம் என்று கூறினார். ஆனால் நிகழ்காலம் 1 வயது பெண் குழந்தைகூட பாதுகாப்பு இல்லாத நிலை உள்ளது. சிவகங்கை மாவட்டத்திலும், பொள்ளாச்சி பாலியல் பயங்கரம், ஈரோடு, திருக்கோவிலூர், சென்னை, கோவை, கிருஷ்ணகிரி என்று சமீப காலமாக பாலியல் வன்முறைகள் தொடர்வதும், பெண் குழந்தைகள் கடத்தப்படுவதும், கொல்லப் படுவதும் சமூக சீர்கேட்டின் அடித்தளமாக செயல்களாக தொடர்கிறது. அனைத்து இடங் களிலும் பெண்கள் மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். பெண்களுக்கு எதிரான குற்றங்களில் புகாரை பெறும் காவல் அதிகாரி உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அனைத்து துறை சார்ந்தவர்களும், துரிதமாக புகாரை கையாள தவறும் பட்சத்தில் துறை வாரியான நடவடிக்கை மட்டுமல்லாமல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். வன்கொடுமைகளுக்கு சட்டத்தை கடுமையாக்க வேண்டும். சட்டத்தின் ஓட்டையை அடைக்க வேண்டும்.

சமீப காலங்களில் குழந்தைகள் மீதான பாலியல் வன்முறைகள், தொல்லைகள் அல்லது சீண்டல்கள் மிகவும் அதிகமாக காணப்படு கின்றன. ஒரு பெண்ணை ஒரு முழுமையான மனுஷியாக பார்க்காமல், அவளை ஒரு உடலாக பார்க்கும் பார்வை மிகவும் அதிகமாகியுள்ளது. பெண்ணின் உடலை சந்தைப்படுத்தும் தற்கால பொருளாதாரமும், அரசியலுக்கு இத்தகைய வன்முறைகளுக்கு நேரடியான அடிப்படை காரணம் ஆகும். அதை கொண்டு பிற பொருட் களை சந்தைப்படுத்தும் கலாச்சாரம் தாராளமய மாக்கலில் உலகமயமாக்கலின் நேரடி விளைவு. 1 வயது குழந்தை கூட பாலியல் வன்கொடு மைக்கு ஆளாவது சாதாரண நிகழ்வாகிவிட்டது. 2014ஆம் ஆண்டிற்கு முன்புவிட 4 ஆண்டுகளாக பெண்கள், மாணவிகள், குழந்தைகள் மீது அதிகளவு வன்கொடுமை நிகழ்த்தப்பட்டுள்ளதாக வும் இதில் ஈடுபட குற்றவாளிகள் பெரும்பாலா னோர் நல்ல உடல் மன ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் என்பது மிகவும் அதிர்ச்சிக் குள்ளாக விசயமாக உள்ளது.

துளிர் என்கிற பாலியல் வன்முறை தடுப்பு மற்றும் தேற்றுதல் அமைப்பு மேற்கொண்ட ஒரு ஆய்வில் ஏறகக்கறைய 1000 குழந்தைகளில் 650 குழந்தைகள் ஏதோ ஒரு வடிவத்தில் பாலியல் ரீதியான சீண்டலுக்கு ஆளாகிறார்கள் என்பதும், அதிலும் 90 சதவீதத்திற்கும் மேல் தங்களுக்கு தெரிந்த, நெருங்கிய உறவினர்கள் மற்றும் அறிமுகமானவர்களாலேயே வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறார்கள் என்பதும் மிகவும் சிந்திக்க வேண்டிய விசயமாக உள்ளது என்பதை பல

பெற்றோர்களை சென்றடைவதில்லை. அவ்வாறு நிகழ்ந்தபின் மிகுந்த அச்சத்திற்கு ஆளாகிறார்கள்.

பல நிகழ்வுகளில் இக்குழந்தைகளின் அறியாமை மற்றும் குற்றம் புரிவதை உணர முடிந்தாலும், அதை பற்றிய தெளிவின்மை அச்சத்மைத தோற்றுவிக்கிறது. பெற்றோர்கள் நம்பாமல் போய்விடுவார்களோ என்ற பயம் பல நேரங்களில் இக்குழந்தைகளை மௌனமாக்கி விடுகிறது. எனவே பொது சமூகம் பெண்கள் மீதான வன்முறை குறித்த தீவிரமான எதிர்ப்பை காட்ட வேண்டும் என்று எவர் விரும்பினாலும் பாதிக்கப்படுகிற பெண்களை இது குறித்து பேச செய்வது இவ்வன்முறைகளை தடுப்பதற்கான வழி என்று கூற வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையெனில் தற்போது இருப்பதுபோல் அவர்கள் மீதான உரிமை மீறல்களையும் வன்முறைகளையும் இயல்பானதெனவோ, மனம் வெதும்பியோ ஏற்றுக் கொள்கிற மனநிலைதான் நீடிக்கும். இதை தடுப்பதற்கான வழிமுறைகள் தீவிரமான செயல்பாடு ஆகியவற்றை தெரிந்திருப்பின் அவர்கள் நம்பிக்கையோடு எதிர்கொள்ள தயாராக இருப்பார்கள்.

எனவே, பெண்கள் அவர்கள் குழந்தைகளாக இருக்கும் போதிருந்தே எவ்வித பாகுபாடும் இல்லாமல் தன்னுடைய உடலும், உரிமைகளும் தங்களுக்கே உரியது என்பதையும் அவ்வுரிமை களுக்காக போராடும் மனநிலை இயல்பானதே என்கிற சிந்தனையும் வரவேண்டும். ஆனால் உரிமை மீறல்களையும், தங்களுக்கு ஏற்படும் இன்னல்களையும் மௌமாகவோ, புலம்பிக் கொண்டே ஏற்றுக்கொள்கிற மனநிலையில் தான் பெண் குழந்தைகள் வளர்க்கப்படுகிறார்கள். எவ்வளவுதான் கல்வியில் முன்னேறினாலும், பொருளாதார ரீதியாக தற்சார்பு உடையவர்களாக இருந்தாலும், பல்வேறு விதமான கொடுமை களையும் அடக்குமுறைகளையும் ஏற்றுக்கொள் ளும் மனோநிலையை பார்க்கின்றோம். சமீப காலத்தில் சமூகத்தின் பல தளங்களிலும் கல்வியிலும் ஏற்பட்டு வருகிற மாற்றங்கள் மவுனமாக வன்முறைகளை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது என்பது மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டு.

## மத்திய, மாநில அரசுகளின் கேளாத்தனம்

கடந்த சில வருடங்களில் தமிழகத்தில் எத்தனையோ ஆணவ கொலைகள், பாலியல் வன்கொடுமைகள், காதலிக்க மறுத்த பெண்ணின் முகத்தில் ஆசிட் வீச்சு, காதலிக்க மறுத்த ஆசிரியை கழுத்தறுத்து கொலை, கைபேசியில் ஆபாச படங்கள் வெளியிட்டு தொடர் மிரட்டல்கள், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்குவது, பல இளம் பெண்களின் வாழ்க்கையை சீரழிப்பது, ஆபாச படம் வெளியிடுவது என ஏராளமான சம்பவங்கள் நம் காதுகளில் அனலை கொட்டுகின்றன. இப்படி பரபரப்பாக பேசப்படும் செய்திகள் ஓரிரு நாட்களில் கண்டுகொள்ளப்படாமல் விடப்படு கிறது. சமூகத்திற்கு இவையெல்லாம் வெறும் சம்பவங்கள். சட்டம்-ஒழுங்கை காக்க வேண்டிய அரசுகளுக்கும், காவல் துறையினருக்கும் இவை பெறும் சம்பவங்களாக எண்ணி கேளாமலேயே விடப்படுகிறது.

எல்லா உயிரினமும் வன்முறையற்ற, அச்சமற்ற ஒரு வாழ்க்கை வாழ உரிமை கொண்டுள்ளது என்பதை ஆளும் அரசுகள் உணர வேண்டும்.

## நல்ல அரசின் கடமை

பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல், பணியிடம், பொதுவெளி போன்ற அனைத்து இடங்களிலும் நடைபெற்று கொண்டே இருக்கிறது. ஒரு பெண் தனக்கு நடக்கும் அநீதி பற்றி வெளியே கூறினால் அஅதன் மீது நடவடிக்கை எடுக்காமல், அப்பெண்ணின் நடத்தை பற்றி பேசி பிரச்சனையின் கோணத் தையே மாற்றி விடுகின்றனர். பாலியல் பலாத்காரம் என்பதை மருத்துவ பரிசோதனை மூலம் நிரூபித்து விடலாம். ஆனால் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களை பற்றி நிரூபிக்க வேண்டுமானால் மிக சிரமம். ஏனெனில், பாலியல் சீண்டல்கள் நடந்தால் அதை வெளிப் படுத்த போதிய ஆதாரம் வேண்டும். அப் பகுதியில் கண்காணிப்பு கேமரா போன்றவை இருந்தால் மட்டுமே அது சாத்தியம். மேலும் பணியிடத்தில் பெண்களுக்கு நடக்கும் பாலியல் சீண்டல்களை கையாள்வது சற்று கடினமான ஒன்று. ஏனெனில் தினமும் அவர்களுடனே பணியாற்ற வேண்டியிருக்கும். பெரும்பாலும் பாலியல் துன்புறுத்தல்களை தருவது, ஒரு சில உயர் பதவியில் இருப்பவர்களாகவோ இருக்க வாய்ப்புயுள்ளது. உயர் அதிகாரிகள் பாலியல் துன்புறுத்தல் செய்தால் உடனே அலுவலகத்தில் அதற்கு மேலான உயர் அதிகாரியிடம் தெரிவிக்க வேண்டும். பணிபுரியும் இடத்தில் உள்ள



உங்களுக்கு நெருக்கமான நண்பர்களிடம் தெரிவிக்க வேண்டும். விசாகா சட்டம் என்பது 2013ஆம் ஆண்டு நடைமுறைபடுத்தப்பட்டது. 10 பெண்கள் பணி செய்தால் விசாகா குழு அமைக்க வேண்டும்.

இது பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்டமாகும். இச்சட்டத்தின்படி விசாகா குழுவை பெண்கள் பணிபுரியும் அனைத்து இடங்களிலும் (அமைப்பு சார்ந்த, அமைப்பு சாராத) அமுலாக்க வேண்டும். இக்குழுவில் உறுப்பினராக அந்த சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் அல்லாத ஒருவரும் கண்டிப்பாக இருக்க வேண்டும். அவர் ஒரு செயற்பாட்டாளராகக் கூட இருக்கலாம். அப்போதுதான் அங்கு நடத்தப்படும் விசாரணை யானது முறையாக இருக்கும். ஆனால், தமிழகத்தில் உள்ள அலுவலகம் உள்ளிட்ட நிறுவனங்களில் எத்தனை நிறுவனங்களில் முறையாக அமைக்கப்பட்டுள்ளது என்பது கேள்விக்குறிதான்.

“கண்களும் ஒளியும் போல
கவின் மலர் வாசம் போல
பெண்களும் ஆண்கள் தாமும்
பெருந்தமிழ் நாடு தன்னில்
தன்கடல் நிகர்த்த அன்பால்
சாமானத்தர் ஆனர் என்று
பண்வந்து காதிற் பாயும் நாள் எந்நாளோ!

என்று பெண்களின் கல்வி குறித்து கவலைப்பட்டு பெண்களின் கல்வி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அக்காலத்திலேயே உரக்க பாடியவர் பாரதிதாசன்.

பெண்களுக்கு கல்வி வேண்டும். குடித்தனம் பேணுவதற்கோ பெண்களுக்கு கல்வி வேண்டும். மக்களை பேணுதற்கு பெண்களுக்கு கல்வி வேண்டும். கல்வியை பேணுதற்கோ என்ற பெண் கல்வியின் முக்கியத்துவத்தை இந்த உலகிற்கு பறைசாற்றி மகத்தான தலைவன். அக்கல்வியை அரசாங்கம் சீரிய முறையில் இலவசமாக தர வேண்டும். கல்விக்கு போதுமான மானியத்தை ஒதுக்க வேண்டும். பெண்களுக்கு உயர் கல்வி பயில சரியான நேரத்தில் உதவித் தொகை தமிழக அரசால் வழங்கப்பட வேண்டும். குழந்தைகள் பசியின்றி படித்திட காமராஜர் அவர்களால் சீரிய நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட மதிய சத்துணவு திட்டம் தனியாரிடம் விடக் கூடாது. அரசு பள்ளிகள் மூடும் நோக்கை கைவிட வேண்டும். மேலும் பெண்கள் அச்சம் இல்லாமல் சமூகத்தில் நடமாட வேண்டும். அவ்வாறு வெளியே வருகிறபோது தான் சமூகத்தில் அனைத்து விதமான மடமைகளையும், பெண்ணடிமைத் தனத்தையும் எதிர்கொள்ள முடியும் என்ற ஆழமான நம்பிக்கை கிடைக்கும்.

“அச்சமும் மடமும் இல்லாத பெண்கள்
அழகிய தமிழ் நாட்டின் கண்கள்”

என்பதற்கேற்ப சுதந்திரம் பெற்று 70 ஆண்டுகளை கடந்த பின்பும் விடுதலை இந்தியாவில் பெண்களுக்கு எந்த பாதுகாப்பும் இல்லாத சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தமிழகத்தில் காவல் துறை மீது எங்களுக்கு பாதுகாப்பு இல்லை. எங்களை நாங்களே பாதுகாத்து கொள்ள எங்களுக்கு துப்பாக்கி வைத்துக் கொள்ள அனுமதி வேண்டும் என்று கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத் ததை பார்க்கும்போது தமிழகத்தில் பெண்களை பாதுகாப்பதற்கு தகுதி இல்லாத நாடாக தமிழகம் மாறிக்கொண்டிருக்கிறது என்பதுதான் நிதர்சனமான உண்மை. பெண்களை பாதுகாப்ப தற்காக உருவாக்கப்பட்டிருக்கின்ற தமிழக பெண்கள் ஆணைய தலைவர் பெண்கள் ஒழுக்கத் துடன் இருக்க வேண்டும். இல்லையென்றால் இதுபோன்ற பாலியல் வன்முறைகள் நடக்கும் என்று பொள்ளாச்சி சம்பவத்தை பார்த்துவிட்ட பிறகும் சொல்லக்கூடியவராக இருக்கின்றபோது பெண்களின் உரிமைகளை, பாலின சமத்துவத்தை, பெண்களின் பாதுகாப்பை தொடர்ந்து பேசுவதற்கு ஏராளமான பாரதியும், பாரதிதாசன்களும், பெரியாரும் பிறக்க வேண்டும்.

**- எஸ்.தமிழ்ச்செல்வி**

## மகளிர் தின விழா

தமிழ்நாடு வணிகவரிப்பணியாளர் சங்கத்தின் சார்பாக மகளிர் தின சிறப்பு கருத்தரங்கம் 28.03.19 அன்று பிற்பகல் கிரீம்ஸ் சாலை வணிகவரி துறை வளாகத்தில் மாநில துணைத் தலைவர் கலைச்செல்வி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொருளாளர் சு. பத்மா அனைவரையும் வரவேற்று பேசினார். இணை ஆணையர்கள் அ.பா.தேவேந்திர பூபதி, விஜயகுமார், துணை ஆணையர் வி. ஜானகி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் மற்றும் கலைஞர்கள் சங்கத்தின் மாநில துணைத் தலைவர் பேரா. சுந்தரவல்லி சிறப்புரை ஆற்றினார். துணை ஆணையர்கள் வெண்ணிலா, சரோஜா, மாநில துணைத் தலைவர்கள் சா. டானியல், ஜோ.எழிலன், முன்னாள் மாநில பொதுச் செயலாளர் தேவன், முன்னாள் மாநில துணைத் தலைவர் வெற்றிராஜன் அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். மாவட்ட இணைச் செயலாளர் சுமதி நன்றியுரை யாற்றினார்.

## புத்தக காட்சி மற்றும் விற்பனை

உலக புத்தக தினத்தை முன்னிட்டு சிறப்பு புத்தக காட்சி மற்றும் விற்பனை தமிழ்நாடு வணிகவரிப்பணியாளர் சங்கத்தின் சார்பாக 29.04.19 மற்றும் 30.04.19 ஆகிய இரு நாட்கள் கிரீம்ஸ் சாலை வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. தமிழ்நாடு வணிகவரிப் பணியாளர் சங்கத்தின் மாநில முன்னாள் பொதுச்செயலாளர் வி.தேவன் புத்தக காட்சியை தொடங்கி வைத்தார். சிறப்பு விருந்தினர் கூடுதல் ஆணையர் ஜி.லட்சுமி பிரியா இ.ஆ.ப. பங்கேற்று சிறப்பித்தார். இணை ஆணையர்கள் லதா, சரஸ்வதி, துணை ஆணையர்கள் மணி மோகன், கார்த்திக், சுமதி, இராஜி, இந்திரா பங்கேற்றனர்.

மாநில துணைத் தலைவர் கலைச்செல்வி, மாவட்ட நிர்வாகிகள் டானியல், இரவிராஜ், பாலகிருஷ்ணன், குணசேகரன், மாரிச்சாமி, சுமதி, மாநில முன்னாள் துணைத்தலைவர் எஸ்.ஏ. வெற்றிராஜன், மாநில செயலாளர் முருகன், மாவட்ட முன்னாள் பொருளாளர் சந்திரன் ஆகியோர் பங்கேற்றனர். உதவி ஆணையர், வணிகவரி அலுவலர், துணை வணிகவரி அலுவலர் சங்கத்தின் மாநில பொருளாளர் வைத்தியநாதன், வணிகவரித் துறை ஓய்வூதியர் சங்கத்தின் சென்னை மாவட்ட தலைவர் சுயம்பிரகாசன் ஆகியோர் பங்கேற்றனர்.

இப்புத்தக காட்சியில் பாரதி புத்தகாலயம், சாகித்திய அகாடமி, இந்து தமிழ் திசை புத்தகங்கள் காட்சி படுத்தப்பட்டது.

## வாசகர் கடிதம்

2019 ஏப்ரல் இதழ் படித்தேன். முன் அட்டைப் படம் பார்த்தேன். நீண்ட நாட்களுக்கு பிறகு அட்டையில் கார்ட்டூன் வந்தது மகிழ்ச்சியாக உள்ளது. வாக்குரிமை விலை போகக் கூடாது தலையங்கம் சிறப்பாக இருந்தது. சுயமையை வேரறுக்கும் கடமையாற்றுவோம், தபால் வாக்குப் பதிவு எப்படி அளிப்பது? மோடி அரசுக்கு 108 பொருளாதார அறிஞர்களின் புள்ளி விவரம், பகை முடிக்கும் நேரமிது ஆகிய கட்டுரைகள் சிறப்பாக இருந்தது. பெரணமல்லூர் சேகரன், முனைவர் சுகி ஆகியோர் எழுதிய கவிதைகளும் சிறப்பு. மொத்தத்தில் இதழில் வெளிவந்த அனைத்தும் நன்றாக இருந்தது.

- **ரா.தட்சிணாமூர்த்தி**, கடலூர்

**இரத்த தானம்**
**உறுப்பு தானம் செய்வோம்!**
**உயிர்களை காப்போம்!**

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com